# கலைமகிழ்நன்

## பேராசிரியர் வித்தியானந்தனின் வாழ்க்கைப்பணி

த. சண்முகசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகிழ்நன்

## பேராசிரியர் வித்தியானந்தனின் வாழ்க்கைப்பணி

த. சண்முகசுந்தரம்

வெளியீடு :
மணிவிழாக் கழகம்
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : மே 1984

விற்பனை : "மகவம்" - மதிக்கலைஞர் வட்டம்
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

விலை : ரூபா பத்து

எல்லா உரிமையும் ஆசிரியருக்கு

---

*Prof*. **S. Vithiananthan**

**A Life of Service**

by

**T. SANMUGASUNTHARAM**, B. A. (CEY.) DIP-IN-ED. (CEY.)

*Printers :* Kugan Press, Tellippalai, Sri Lanka.

*All rights reserved*

உ
சிவமயம்

# 'கலைமகிழ்நன்' வாழ்த்துரை

யாழ்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் திரு. சு. வித்தியானந்தன் அவர்களுக்கு எடுக்கும் மணி விழாவும்,

'கலைமகிழ்நன்'

என்ற நூலின் வெளியீட்டு விழாவும் ஒருங்கு நடைபெறுவது மகிழ்ச்சிமேல் மகிழ்ச்சி தருவதாகும்.

உபவேந்தர் அவர்களின் பிறந்தகமான வீமன்காமத்தில், அவரின் முன்னோர்களால் நிறுவப்பெற்ற மகாவித்தியாலயத்தில், அன்னாருக்கு மணிவிழா எடுப்பது வெகுவெகு பொருத்தம்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்' என்ற அருமைத் திருக்குறள்தான், ஞாபகத்திற்கு வருகிறது

இவ்விழாவில் வெளியிடப்படும் 'கலைமகிழ்நன்' என்னும் நூலை இயற்றியவர், உபவேந்தர் அவர்களின் மாணவரும், பிரபல எழுத்தாளரும், பிரசித்தி பெற்ற மகாஜனக் கல்லூரியின் அதிபருமான திரு. த. சண்முகசுந்தரம் அவர்கள் என்றறியும்போது பேருவகை பிறக்கின்றது.

பேராசிரியர், உபவேந்தர், கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியே

'கலைமகிழ்நன்'. ஆசிரியர்கள், வரலாற்றுத்துறை மாணவர்கள் உள்ளிட்ட பலருக்கும் பயன்தரும் நூல் கலைமகிழ்நன்.

கலைமகிழ்நனில் உள்ள அருமையும் பெருமையும் வாய்ந்த கருத்துக்கள், கல்விமான்களுக்கு நல்விருந்து.

கிடைத்தற்கரியதொரு பொக்கிஷசாலை கலைமகிழ்நன்.

அருமந்த
கலைமகிழ்நனை
வெளியிடும்
தாபனத்துக்கு
நன்றிமேல் நன்றி.

உபவேந்தர் அவர்களையும், நூலையும், நூலாசிரியரையும் பெரிதும் பாராட்டுவோமாக.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**இலக்கிய கலாநிதி**
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**
*01-05-84*

# வெளியீட்டுரை

யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தனின் வாழ்க்கைப்பணி தமிழ்கூறும் நல்லுலகின் வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றுள்ளது. ஈழவியல், தமிழியல் என்பனவற்றின் ஆராய்ச்சி வழிகாட்டியாக இவர் அமைந்துள்ளார். இன்று இவரின் வாழ்க்கைப் பணி ஆராய்ச்சிப் பெரும்பொருளாகிவிட்டது; ஆகவே அன்னாரின் அறுபதாவது ஆண்டுவிழாவின்போது இப் பணியைச் சற்று நோக்குதல் சாலவும் பொருந்தும். பேராசிரியரின் பிறந்த ஊரான தெல்லிப்பழையில் அவர் முகாமையாளராக இருந்த வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் மணிவிழாவை நன்கு நடத்தவும் இந்த நூலை அவ்வேளையில் வெளியிடவும் தீர்மானித்தோம். நூலை எழுதும் பொறுப்புப் பேராசிரியரின் முதன் மாணாக்கரில் ஒருவரான தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் த. சண்முகசுந்தரம் அவர்களிடம் கொடுபட்டது. இதனைச் செவ்வனே சுருக்கி எழுதித்தந்த அவருக்கு எமது நன்றி. இதற்குப் பாராட்டுரை வழங்கிய சித்தாந்த சாகரம், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். மணிவிழாச் செவ்வனே நடைபெற உதவிய வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவருக்கும், பதிப்பு வேலையை மேற்பார்வை செய்த எம் உபதலைவர் திரு. நா. சுப்பிரமணியத்திற்கும் எம் உளப்பூர்வமான நன்றி. இந்த நூலை அச்சிட்ட குகன் அச்சகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினருக்கும் எம் நன்றி உரித்தாகும். எமது பணி சிறப்புற அமைந்த ஏனைய அன்பர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

மணிவிழாச் செயற்குழு :

தலைவர் : திரு. த. சண்முகசுந்தரம்
அதிபர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

துணைத் தலைவர்கள் :

திரு. ஆ. சிவநேசச்செல்வன்
பிரதம ஆசிரியர் "வீரகேசரி", கொழும்பு

திரு. நா. சுப்பிரமணியம்
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகம்

புலவர் ம. பார்வதிநாதசிவம்
உதவி ஆசிரியர் "ஈழநாடு", யாழ்ப்பாணம்

திரு. மு. சிவராசா
அதிபர், வீமன்காமம் மகாவித்தியாலயம்
தெல்லிப்பழை

செயலாளர் :

திரு. வேல் அமுதலிங்கம்
தலைவர், "மகவம்", குரும்பசிட்டி,
தெல்லிப்பழை

பொருளாளர் :

திருமதி கோகிலா மகேந்திரன்
ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

இவர்களுக்கும் எம் நன்றி.

தெல்லிப்பழை
இலங்கை
18-05-84

பேராசிரியர் வித்தியானந்தனின்
மணிவிழாக் கழகத்தினர்



யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்
துணைவேந்தர் கலைமாமணி
பேராசிரியர் சு. வித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்
துணைவேந்தர் கலைமாமணி
பேராசிரியர் சு. வித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகிழ்நன்

## பேராசிரியர் வித்தியானந்தனின் வாழ்க்கைப் பணி

த. சண்முகசுந்தரம்

"மலையை முழுமையாகக் காணத் தூரம் வேண்டும். அதேபோன்று வரலாற்று நிகழ்ச்சியை மதிப்பிடக் காலம் வேண்டும்" என்பர் அறிஞர். இக் கருத்துப் பெரியார் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை மதிப்பிடவும் பொருந்தும். இருந்தும் வரலாற்று நிகழ்ச்சி சிலவற்றையும் பெரியோர் சிலர் வாழ்க்கை வரலாற்றையும் இலகுவாக மதிப்பிடலாம்; ஏனெனில் இவை மலையின் பெருமுடிபோல உயர்ந்து நிமிர்ந்து நிற்கும்; நிற்பதுமல்லாமல் வரலாற்றில் நிலையான இடத்தைப் பிடித்துவிடும். யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்து முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் தமிழியலில் நிலையான இடம் பெற்றுவிட்டார். இதில் ஐயமில்லை. இவரின் வாழ்க்கை வரலாறும் தமிழியற் புலமையும் இன்று தலைதூக்கி நிற்கின்றன இக்காலத்துத் தமிழியல் வளர்ச்சியில், மறுமலர்ச்சியில் ஏற்பட்ட திருப்பம் பலவும் இவரால் தோற்றுவிக்கப்பட்டன.

வித்தியானந்தனின் பலதரப்பட்ட தமிழ்ப் பணியையும் மதிப்பிடுவது பெரும் பொறுப்பான அலுவல். பெரும் பொறுப்பான அலுவலாக இருந்த போதும், அவரின் மணி விழாவின்போது இதனைத் தொடக்கி வைப்பது நன்று; இந்த முயற்சி இனிவரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகின்ற ஆய்விற்கு வழிகாட்டியாக அமையும். அது மட்டன்று. இக்காலத்தவருக்கும் இந்த ஆய்வு நல்ல பயன்தரும். இப்படியான பணி பெரும் இன்பத்தையும் தரும். வித்தியானந்தனின் வாழ்க்கை வரலாறு சமகாலத் தமிழ் இலக்கிய வரலாற்றின் முக்கியமான கிளை. அத்துணைத் தனித்தன்மை நிரம்பியது அது. சமகாலத் தமிழ் வளர்ச்சி, கல்வி, திராவிட இயல் ஆராய்ச்சி, உயர்கல்வி அமைபபு, உயர்கல்வி நிருவாகம், கலை மறுமலர்ச்சி போன்றவை பேராசிரியர் வித்தியானந்தனின் வாழ்க்கையோடு அரசும் வேம்பும் போலப் பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளன. அதுமட்டன்று. இப்பேராசானின் நற்பணி தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது தமிழ்கூறும் நல்லுலகம் பேராசிரியரை நன்கு அறியும்; அறிந்து போற்றுகின்றது. இவரின் தனிப் பெருமைக்குக் காரணமாக அமைந்துள்ளமை ஆழ்ந்த புலமை, நற்பண்பு, ஆற்றல், எவருக்கும் உதவும் தனித்தன்மை எனலாம். இவர் சிறந்த விரிவுரையாளர்; தலைசிறந்த ஆராய்ச்சியாளர்; ஆராய்ச்சியாளருக்கு வழிகாட்டி; ஆராய்ச்சி அரங்கில் எப்பொழுதும் திகழும் பெரும் புலவர். மக்கள் கலைச்செல்வத்தின் ஒப்பற்ற பாதுகாவலர். அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி முயற்சிகளின் வழிகாட்டி, ஆக்க இலக்கியம் படைப்போரை எப்போதும் ஊக்குவிப்பவர்; நிகரற்ற ஆய்வாளர்; பல்கலைக்கழகச் சமூகவாழ்வை நெறிப்படுத்தும் வழிகாட்டி. பொது மக்களின் வாழ்க்கையிலே நன்கு கலந்து அவர்களின் வாழ்வை வளம்படுத்தும் பெரியார். வானொலியிலும் பொது மேடையிலும் நன்கு பேசும் ஆற்றல் படைத்தவர். தெளிந்த சிந்தனையாளர், அனைத்துலகத் தமிழ் ஆய்வு அரங்கிலே இவரின் எழுத்தும் கருத்தும் பெரும் தாக்கத்தையும் துலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளன. அதுமட்டன்று. இவர் சிறந்த நண்பர், நல்ல பண்பாளர், சுருங்கச் சொன்னால் இவர் முழுமையான மனிதர் எனலாம்.



## நல்ல குடும்பம் :

பேரறிவு, ஆற்றல், நற்பண்பு எல்லாம் இவருக்கு எப்படி வந்தன என்பதை நோக்கலாம்: மனிதனைப் பரம்பரை உருவாக்குகின்றது என்பர் ஒரு சாரார். இல்லை. மனிதனைச் சூழல் உருவாக்குகின்றது என்பர் மற்றொரு சாரார். கடவுளை நம்புவோரோ நல்ல மனிதனைத் தனக்கு வேண்டிய வேண்டிய இடத்துக் கடவுளே உருவாக்குகின்றார் என்பர். இந்த மூன்று கருத்தும் வித்தியானந்தனைப் பொறுத்தவரையில் பொருந்தும். இவர் நல்ல குடும்பத்தில் பிறந்தவர். நல்ல சூழ்நிலையில் வளர்ந்தவர். தமிழியல் வளர்ச்சிக்காகக் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பர். வித்தியானந்தன் மாவிட்டபுரம் முருகனின் அடிமை ஆண்டுதோறும் இவரைத் தேர்த் திருவிழாத் தினத்தன்று காணவேண்டுமானால் வீமன்காமம் மகா வித்தியாலயம் என்னும் கலைக்கோயிலுக்குத்தான் செல்ல வேண்டும். பல்கலைக்கழகத்து மாணவருக்கு அறிவை வழங்பவர் இவர். தேர்த் திருவிழா நாளன்று முருகனடியாருக்குச் சோறு வழங்கும் பணியில் ஈடுபட்டிருப்பார். மாவை முருகன் கோயிலில் பேராசிரியரின் குடும்பத்தின் நினைவாக அமைபவை இரண்டு திருச்சின்னங்கள். இன்று எழும்புகின்ற கிழக்குவாயில் புதிய கோபுரம். இரண்டு அதற்குப் பக்கத்தில் அமைந்துள்ள உடையார் மடம். இந்த மடத்திலிருந்து பார்த்தால் வீமன்காமம் மகா வித்தியாலயம் தெரியும். இது கலைக்கோயில். இந்த மூன்றையும் கட்டி எழுப்பிய பெருமை பேராசிரியரின் முன்னோரைச் சேரும். மாவிட்டபுரம் முருகன் கோயிலில் இருந்து வடக்கே நெடுஞ்சாலையில் ஒரு கல் தூரத்திலிருக்கின்றது மற்றைய கலைக்கோயில் காங்கேசன்துறை நடேசுவராக் கல்லூரி. இக்கல்லூரியை அமைக்க முன்னர், உள்ளே காளிகோயிலை நிறுவினார் இக்கல்லூரியை நிறுவிய குருநாத உடையார். இன்று இந்தச் சின்னங்கள் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபுரம், மடம், கல்லூரி இரண்டு—பேராசிரியரின் குடும்பத்தின் நினைவாக அமைந்துள்ளன. வீமன்காமம் மகா வித்தியாலயத்தின் முகாமையாளராக இருந்தவர் பேராசிரியர்.

பேராசிரியரின் தந்தையார் வழக்குரைஞர் சின்னத்தம்பி சுப்பிரமணியம். இந்தச் சின்னத்தம்பிதான் வீமன்காமம் தமிழ்ப் பாடசாலையை மிகவும் சிறிய அளவில் அயராது உழைத்து நிறுவினார். பேராசிரியரின் பேரனான சின்னத்தம்பி, ஆறுமுகநாவலர் தொடக்கி வைத்த மறுமலர்ச்சி இயக்கத்தினால் கவரப்பட்டவர். ஆகவே தமிழ்க் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டார். இந்தச் சின்னத்தம்பியின் உறவினரே காங்கேசன்துறை நடேசுவராக் கல்லூரியையும் நிறுவினர் என்பது இங்கே குறிப்பிடவேண்டியது. தந்தையார் தொடக்கிவைத்த சிறிய பாடசாலையாம் நன்மரத்தை ஓங்கி வளரச் செய்யும் பெரும்பணியில் சட்டத்தரணி சுப்பிரமணியம் முழுமூச்சாக ஈடுபட்டார். இதுவே இன்று வீமன்காமம் மகா வித்தியாலயமாகத் திகழ்கின்றது. இந்த இளம் சட்டத்தரணி நல்ல விவேகி. எல்லோரிடமும் நன்றாகப் பழகுபவர். ஊரிலே நல்ல செல்வாக்கு உடையவர். ஆகவே ''வழக்குக் கட்டுகள்'' இவர் வீட்டிலே வந்து குவிந்தன. அத்துடன் தொழில் முறையில் 'கறாராக நில்லாமல்' வழக்காளிகள் கொடுத்ததை வாங்குவார்.

சட்டத்தரணி சுப்பிரமணியத்திற்கு வழக்குரைக்கும் தொழில் இரண்டாவது தொழிலாகவே இருந்தது. முதலாவது தொழில் பாடசாலை வளர்ச்சிக்கு உழைத்தல். இதனால் சுப்பிரமணியம் குடும்பக் கடமைகளையும்கூடச் சிலவேளை மறந்து உழைப்பார். ஒதுக்கமான இடத்தில் இருந்த சிறிய பாடசாலைக்கு நல்ல வாய்ப்பான இடம் ஒன்றை இவர் தேடினார். மாவிட்டபுரம் முருகன் கோயிலுக்குக் கிழக்குப் பக்கத்தில் பெருஞ்சாலைக்கு அண்மையில் உள்ள நல்ல காணியை வாங்கினார். புதிய கட்டடங்களை அமைத்தார். வீமன்காமம், தமிழ்ப் பாடசாலையைப் புதிய இடத்திற்கு மாற்றினார். சிறந்த முருகனடியாரான இவர் முருகன் கோயிலுக்கு அண்மையில் கலைக்கோயிலை அமைத்தார். அமைத்ததுடன் மட்டும் நிற்கவில்லை. மாவை முருகன் கோயில் திருவிழாக் காலங்களில் இக்கல்லூரியில் பெருமளவில் அவியல் நடைபெறும். முருகனடியாருக்குச் சோறு வழங்கப்படும். திரு. சுப்பிரமணியத்தின் உறவினரே பல ஆண்டுகளாக மாவை முருகன் கோயில் பதினாறும் திருவிழாவையும் சிறப்புடன் செய்து வருகின்றனர். புதிய இடத்தில் வீமன்காமம் பாடசாலை நன்கு நடைபெறத் தொடங்கியது. வசதி குறைந்த பிள்ளைகளுக்கு இக் கல்லூரி புகலிடம் ஆயிற்று; ஆனால் சட்டத்தரணி சுப்பிரமணியத்தின் குடும்பவசதி குன்றத் தொடங்கியது. கல்விக்காக உழைப்பவர் பெரும்பாலும் அகால மறைவைப் பெறுவர். அத்துடன் ''குடும்பப் பொருளாதார நெருக்கடி என்னும் சொத்தையே'' தம் மனைவி மக்களுக்கு விட்டுச் செல்வர். இந்தப் பொது விதிக்குச் சட்டத்தரணி சுப்பிரமணியம் விதிவிலக்கானவர் அல்லர். இவரின் மறைவு 1944இல் நிகழ்ந்தது.



சட்டத்தரணி சுப்பிரமணியம் தமிழ் மொழியில் பெரும் ஈடுபாடுடையவர். [நொத்தாரிசுக் கடமையை ஏற்பதற்காகத் தமிழைக் கற்றுப் பின்னர் காணி உறுதி எழுதுவதுடன் பலரும் தமிழ்க் கல்வியை நிறுத்திவிடுவதுண்டு; ஆனால் திரு. சுப்பிரமணியம் தமிழை விடாது கற்று வந்தார்.] இவரின் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தவர் செல்வி முத்தம்மா சுப்பிரமணியம். இவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்; வளம் படைத்த குடும்பத்திலே தோன்றியவர். இதனால் வசதியான வாழ்க்கையைத் தன் பிறந்த வீட்டிலே நடத்தியவர். இருந்தும் தம் கணவனின் கல்விப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றிற்கும் உறுதுணையாக அமைந்தார். கணவன் பட்ட இன்னல் யாவற்றிலும் தானும் பங்கு கொண்டார். கணவனின் திடீர் மறைவு இந்த அம்மையாருக்குப் பெரும் சோதனையாகியது. தூய வெள்ளை உடையணிந்து சோகமே உருவாகிய இவர் தன் வாழ்வின் இரண்டாவது கட்டத்தைத் தொடங்கினார். இந்த அம்மையாருக்கு உண்மையில் குடும்பம் இரண்டு. வீட்டிலே பெற்றெடுத்த குழந்தைகள் பதினொருபேர். மற்றக் குடும்பத்தில் — அதாவது வீமன்காமம் பாடசாலையில் — நூற்றுக்கணக்கான குழந்தைகள். இந்த இரண்டு குடும்பத்தையும் நிருவகிப்பது கடினமான அலுவல். பாடசாலை முகாமையாளர் பதவி அந்தக் காலத்திலே நெருப்பைத் தலையிலே சுமப்பது போன்ற செயல். உதவி—நன்கொடைபெறும் யுகம் அது. இந்த இரண்டு குடும்பத்தையும் இவர் எப்படித் தாங்கி நடத்தப்போகிறார் என உற்றார், உறவினர், ஊரவர், அயலவர் கவலையடைந்ததும் உண்டு. இந்த அறைகூவல் இந்த அம்மையாருக்கு எங்கிருந்தோ அளப்பரிய வலுவைக் கொண்டுவந்து கொடுத்தது. ஆழ்ந்த மதப்பற்றும் நற்பண்பும் தான் இவருக்கு இந்த வலிமையை உதவின.

குடும்பத்தில் மூத்தவர் அம்பிகாபதி. பின்னை நாளில் பொறியியலாளராகக் கடமை புரிந்தவர். தந்தையாரின் அகால மறைவு குடும்பத்திற்கு நிகழ்ந்த பேரிடி என்பதைத் அம்பிகாபதி உணர்ந்தார். இந்த இழப்பை ஈடுசெய்ய அம்பிகாபதி தன்படிப்பை இடையில் நிறுத்தினார்; அரசாங்க வேலையில் சேர்ந்தார்; குடும்பத்தைக் கவனிக்க வேண்டும்; பாடசாலையைப் பேணி வளர்க்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இயல்பான விவேகம் உடைய தம்பி வித்தியின் பல்கலைக்கழகப் படிப்புத் தடைப்படப்படாது. இந்த எண்ணமே தியாக வடிவம் கொண்டது. அம்பிகாபதியில் இளம் வித்தியானந்தனின் கல்விக்கு



உறுதுணையாக அன்னையும் தமையனும் இருந்தனர். பின்னர் வித்தியானந்தன் குடும்பப் பொறுப்பைத் தமையனுடன் சேர்ந்து பகிர்ந்து கொண்டார். இளமையிலே பெரும் பொறுப்பை ஏற்ற வித்தியானந்தனின் பண்பு மேலும் வளர்ந்தது. எந்தத் துன்பம் வந்தாலும் பொறுப்பை விட்டுப் புறமுதுகு காட்டி ஓடப்படாது, செய்பவற்றைச் செம்மையாகச் செய்ய வேண்டும், துன்பப்படுபவருக்கு உதவ வேண்டும். ஆறுதல் தேறுதல் சொல்ல வேண்டும் என்பவற்றை இளம் வித்தியானந்தன் தன் வாழ்க்கை என்னும் பல்கலைக்கழகத்திலே கற்றார். நற்பண்பு பலவற்றையும் தாய் தந்தையரிடமிருந்து பெற்றார் வித்தியானந்தன்.

தந்தை சுப்பிரமணியத்தின் பண்பை அவர் பிள்ளைகளுக்குச் சூட்டிய பெயரில் இருந்து அறியலாம். அவை: அம்பிகாபதி, வித்தியானந்தன், கலாவல்லி, திருநாவுக்கரசு, தயாநிதி, பானுமதி, இந்துமதி, இரதிதேவி, தேவகுஞ்சரபதி, அருணமின்பதி, குணநிதி. இப் பெயர் யாவும் பிறப்பு முறைப்படி இங்கு தரப்படுகின்றன. அம்பிகாபதி தந்தையைப் போல நடுத்தர வயதில் மரணமடைந்தார். மற்றவர் எல்லாரும் நல்லநிலையில் இருக்கின்றனர். தந்தைதாய் செய்த புண்ணியம் இது என்பர்.

தந்தையார் இட்ட பெயருக்கு ஏற்பவே வித்தியானந்தனின் வாழ்க்கை அமைந்தது. இவர் தமிழ் வித்தையைக் கற்றார்; அதிலே தனி இன்பம் கண்டார். இந்த இன்பத்தை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளுகிறார். தனித்தமிழ் ஆர்வத்தால் உந்தப் பெற்ற வித்தியானந்தன் 'கலை மகிழ்நன்' என்ற புனைபெயரில் மறைந்து நின்று கட்டுரை பலவும் எழுதினார். உண்மையில் இவர் கலையில் ஈடுபட்டு மகிழ்பவர்; மற்றவரையும் மகிழ வைப்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விப்பேறு :

1924ஆம் ஆண்டு மேத் திங்கள் எட்டாம் நாள் வித்தியானந்தன் பிறந்தார். இளமை இனிது கழிந்தது. உரிய முறைப்படி ஆரம்ப கல்வியைப் பெற்றார். ஆரம்பக் கல்வி சைவச் சூழலில் நடைபெறவேண்டும் என்பது தந்தையாரின் கண்டிப்பான கருத்து. ஆகவே வீமன்காமம் பாடசாலையிலே சிறுவன் வித்தியானந்தனின் ஏடு தொடக்கும் வைபவம் நடந்தது. இதே பாடசாலைக்குப் பேராசிரியர் வித்தியானந்தன் பின்னர் முகாமையாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் தெல்லிப்பழை இருமொழிப் பாடசாலையிலும் (இப்போதுள்ள யூனியன் கல்லூரி) 1935 ஆம் ஆண்டு தொடக்கம் 1940 ஆம் ஆண்டு வரையும், யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலும் கற்று முன்னேறினார். பல்கலைக்கழகத்திற் புகுமுன்னர் சில மாதங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்றார். 1941 இல் கொழும்பு இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியிலே சேர்ந்தார். இதுவே பின்னர் இலங்கையின் ஒரே ஒரு பல்கலைக்கழகமாக மாறியது. இடைநிலைத் தேர்விற்காக ஆங்கிலம், இலத்தின், வரலாறு, தமிழ் என்னும் பாடங்களைக் கற்றுத் தேறினார் இவர்.

இளம் வித்தியானந்தனின் நெஞ்சிலே தமிழ் என்னும் தாமரையை வளர்த்துவிட்டவர் இவரின் தந்தையார். இந்தத் தாமரைக்குப் பேர் ஊற்றாக இருந்தவர் கலையருவி கணபதிப்பிள்ளை. இவர்தான் பிள்ளை நாளில் பேராசிரியராக இருந்தவர். பேராசிரியர் வித்தியானந்தனின் நெஞ்சில் வேறு ஒரு தாமரையும் இடம் பிடித்துக்கொண்டது. அதுதான் வாழ்க்கைத் துணைவி கமலாதேவி. மறைந்த தன் தந்தைக்கு நன்றிக்கடன் செய்யும் வகையிலும், கலையருவி கணபதிப் பிள்ளைக்கு உளநிறைவு ஏற்படும் வகையிலும் இளைஞர் வித்தியானந்தன் தன் கலைமாணிப்பட்டப் படிப்



பிற்காகச் சிறப்புப் பாடமாகத் தமிழையும் துணைப் பாடமாக இலங்கை இந்திய வரலாற்றையும் தெரிவு செய்தார். வடமொழி ஆரம்பக் கல்வியும் இக்காலத்திலேதான் நிகழ்ந்தது. இளைஞர் வித்தியானந்தனின் செயலைக்கண்டு ஏனைய பட்டதாரி மாணவர் சற்றுத் திகைத்தனர். குடியேற்ற ஆட்சி நிலவிய அக்காலத்தில் தமிழுக்கும் சிங்களத்திற்கும் உரிய இடம் கொடுக்கப்படவில்லை. வீட்டு மொழியாக அங்காடி மொழியாகவே இவை இருந்தன. பிரித்தானியப் பேரரசு அப்படி எம்மை நடக்கவைத்தது. ஆங்கிலமே செம்மையான மொழி என்ற கருத்து அக்காலம் நிலவியது. அத்துடன் தமிழ்க்கல்வி சோறு போடாது என நம்மவர் ஏங்கினர். மேல்நாட்டு மொழிகளைக் கற்கலாம் எனக் கிரேக்க இலத்தின் மொழிப் பேராசிரியர் யே. எல். சி. உறட்டிறிக்கோதன் மாணவனும் வித்தியானந்தனுக்கு யோசனை வழங்கினார். தமிழ் என்னும் தாமரையைத் தான் விரும்புவதாக மாணவன் வித்தியானந்தன் மறுமொழி கொடுத்தான். பேராசிரியர் உறட்டிறிக்கோ தலைசிறந்த பத்திரிகையாளர். இதனால் இலங்கைத் தேசிய மொழிகளின் மறுமலர்ச்சிப் பின்னணி இவருக்கு நன்கு விளங்கும்; ஆகவே தன் மாணவனுக்கு இப்பெரியார் ஆசி வழங்கினார்.

சிறப்புப்பட்டப் படிப்பை மேற்கொண்ட வித்தியானந்தன் அதில் தேர்ச்சி பெற்றார். அக்கால வழக்கப்படி கலைமாணி வித்தியானந்தன் அரசாங்க உத்தியோகம் தேடிப் போகவில்லை. அரசாங்க உத்தியோக மோகத்திற்கு வித்தியானந்தன் இரையாகமற் பார்த்துக்கொண்டார் கலாநிதி கணபதிப்பிள்ளை. இவரின் ஆசியுடனும் தாய் தமையனின் அன்புக் கட்டளையுடனும் கலைமாணி வித்தியானந்தன் முதுமாணிப் படிப்பை மேற்கொண்டார். 1944 ஆம் ஆண்டு தொடக்கம் 1946 ஆம் ஆண்டு வரையும் படித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பெற்ருர். பட்டம் பெற்றவருக்குப் பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளர் பதவி கிட்டியது. அதனுடன் இவரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் இலங்கையில் நிகழும் தமிழ்க்கல்வி வரலாற்றிலும் புதியதொரு யுகம் தொடங்கியது.

## பொதுமக்களின் தொடர்பு :

பேராசிரியர் வித்தியானந்தனின் புலமை, நற்பண்பு ஆகியவற்றை எடுத்து விரித்துக்கூற முன்னர் அவரின் தனிப்பண்பு ஒன்றை இங்கே முதலில் தெரிந்தெடுக்கவேண்டும். அதற்கு அழுத்தமும் தரவேண்டும். பேராசிரியர் வித்தியானந்தன் எந்த ஆராய்ச்சி மாநாட்டிலும், எந்தத் தமிழ்ச் சங்கத்திலும் முதல் வரிசையில் இடம்பெறும் தகைமை உடையவர். பட்டம், பதவி எல்லாம் இவருக்கு மிகவும் இலகுவாகக் கிடைத்தன. பேர் புகழுக்கோ குறைவில்லை; இருந்தும் பேராசிரியர் உள்ளத்திலே விலைமதிக்க முடியாத கோட்பாடு ஒன்று மிளிர்கின்றது. "மக்கள் இல்லாமல் மொழி இல்லை, சால்பு இல்லை, கலை இல்லை, ஆராய்ச்சி இல்லை" என்பதே அந்தக் கோட்பாடு. இதனுல் இவர் எப்போதும் பொதுமக்கள் தொடர்பை வளர்த்து வருகின்ருர். மொழியை, கலையை, சால்பை வெறும் ஆராய்ச்சிப் பொருளாக்கி அவற்றை ஆய்கூடச் சுவர்களுக்குள் மட்டும் வைத்திருக்க இவர் விரும்புவதில்லை. ஆராய்ச்சியாளர் சிலர் மேல்மட்டத்திலிருந்து ஆராய்ச்சி நடத்துவர். இப்படியானவர் பொதுமக்களிடம் இருந்து பிரிந்து திரைந்து வாழத் தலைப்படுவர். அதுமட்டன்று. இந்த மூடக்கொள்கையையிட்டுப் பெருமையுங் கொள்வர். பேராசிரியர் வித்தியானந்தன் என்றுமே மக்களை நன்கு புரிந்து வாழ்பவர். இதிலே பெருமையும் இன்பமும் காண்பவர்; பேராசிரியர் வித்தியானந்தனின் இந்த உளப் பாங்கிற்கு ஓரளவு காலாக அமைந்தவர் இலங்கைப்



பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார்; பெரும் அளவில் காலாக இருந்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை இதனைத் தயங்காமல் கூறலாம். பேராசிரியர் கணபதிப்பிள்ளை மறைந்தபோது "என்னை ஆளாக்கிய பெருமகன்" என உள்ளத்தைத் திறந்து தன் நன்றியைச் செலுத்தினுர் பேராசிரியர் வித்தியானந்தன். கற்பிக்கும் ஆற்றல், ஆராய்ச்சித் திறமை, கலைஈடுபாடு என்பவற்றைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடம் இருந்தே பேராசிரியர் வித்தியானந்தன் பெற்ருர்.

## விரிவுரை அரங்கில் :

இளம் வித்தியானந்தனை உதவி விரிவுரையாளராக நியமிக்கப் பெரும் முயற்சி செய்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. அப்பொழுது பேராசிரியராக வீற்றிருந்தவர் விபுலானந்த அடிகளார். வீற்றிருந்தார் என்ருல் உண்மையில் வீறுடன் இருந்தார் என்பது பொருள். தமிழ் வீறு குறையவில்லை; ஆனுல் அவரின் உடல்நல வீறு குறைந்துகொண்டு வந்தது. வித்தியானந்தனின் நியமனத்தை அடிகளாரும் ஆதரித்தார். இதற்குப் பெரும் ஆதரவு வழங்கியவர் பேராசிரியர் உறட்டிறிக்கோ; அப்பொழுது தமிழ்த் துறையில் கடமையாற்றியவர் மூவர். பேராசிரியர் விபுலானந்த அடிகளார் இராமகிருட்டிண மடத்துறவி தூய்மையான காவித்தேசிய உடையிலே காட்சி தருவார். கலாநிதி கணபதிப்பிள்ளை எப்போதும் எளிமையான தேசிய உடையணிந்து வருவார். விரிவுரையாளர் வி. செல்வநாயகத்தின் தூய வெள்ளை உடை எப்போதும் மடிப்புக் குலையாமலிருக்கும். இந்த மூவரும் இளம் வித்தியானந்தனின் நல்லாசிரியர். இந்தத் தமிழ் அரிமாக்கள் இடையே இளம் வித்தியானந்தன் காற்சட்டை, மேற்சட்டை, பட்டதாரிக்குரிய கறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கி அணிந்து காட்சி தந்தார். "மேல் நாட்டுப் பாணியில் வந்த இந்தப் "பொடியனிடம்" 'கற்க என்ன இருக்கிறது? இவருக்கு நல்ல தமிழ் தெரியுமோ?" எனப் பட்டதாரி மாணவர் சிலர் வெளிவெளியாக வினவினர். சிலர் அப்படி வினவாவிட்டாலும் அந்த வினாவை உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தனர். "இவரின் விரிவுரை எப்படி அமையும்?" என ஊகிப்பதில் தமிழொடு தொடர்பில்லாத மேல் மட்டத்தினர் பலர் ஈடுபட்டனர். இளம் விரிவுரையாளர் வித்தியானந்தன் சற்றுப் பதட்டத்துடன் வகுப்பிற்கு வந்து இலக்கிய வரலாற்று விரிவுரையை நடத்தினார். முதலாம் நாள், இரண்டாம் நாள் என்று விரிவுரை தொடர்ந்தது. எல்லோரின் ஐயமும் தெளிந்தது. மிகச் சிறந்த விரிவுரையாளர் என்ற பெயரை வித்தியானந்தன் பெற்றார். பட்டதாரிமாணவர் மேலும் ஓர் உண்மையைக் கண்டுகொண்டனர். வித்தியானந்தனின் விரிவுரையிலும் பார்க்க, அவர் நடத்துகின்ற கட்டுரை வகுப்பும் கலந்துரையாடலும் மிகச் சிறந்தவை என்பதே அந்த உண்மை.

## மூவரின் தாக்கம் :

பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் வித்தியானந்தனைக் கற்பித்தவர் மூவர். பேராசிரியர் விபுலானந்த அடிகளார், கலாநிதி கணபதிப்பிள்ளை, விரிவுரையாளர் வி. செல்வநாயகம். இந்த மூவரிடம் இளம் வித்தியானந்தன் கற்றவை பல. பேராசிரியர் விபுலானந்த அடிகளார் தலைசிறந்த கல்விமான்; இசை ஆராய்ச்சியில் "யாழ் நூல்" மூலம் பெரும்புகழ் ஈட்டிய பெருமுனி; பண்பின் உறைவிடம். வேத காலத்துக் குரு போலக் காட்சி கொடுப்பார். மேல் நாட்டுப் புலமையும், கீழ்நாட்டுப் புலமையும் நிரம்பியவர்; எந்த நேரமும் சுறுசுறுப்பாக இயங்குவார்: கலாநிதிக் கணபதிப்பிள்ளை அரிமாப் போன்றவர்:



காட்டிலே அரிமா சோம்பிக் கிடப்பதுபோலக் கிடக்கும்; ஆனால் அதனை எழச்செய்ய ஏதாவது தூண்டுதல், சுரண்டுதல் வேண்டும். எழும்பிய அரிமா அரிமாவாகவே இயங்கும், சற்றுச் சோம்பல் உள்ள கலாநிதி கணபதிப்பிள்ளைக்குத் தூண்டுதல் கிடைத்துவிட்டால் போதும். இம்மென்னுமுன்னே, கதை, கட்டுரை, கவிதை, நாடகம் எல்லாம் பிறக்கும். இவர் வற்றாத கலையருவி போன்றவர். அதனுடன் மொழி ஆராய்ச்சி, கல்வெட்டு ஆராய்ச்சி எல்லாம் இவருக்குத் தண்ணீர்பட்டபாடு. எல்லாருடனும் அன்பாகப் பழகுவார். இன்னா செய்தாருக்கும் இனியவை செய்யும் பண்பாளன். தமிழைக் கற்கின்ற மாணவருக்குப் புள்ளி வழங்குவதில் 'கறுமித்தனமாக' நடக்கமாட்டார்; சற்றுத் தாராளமாகவே நடப்பார். தமிழைக் கற்கும் மாணவரைக் 'கலக்கி அடிக்கப்படாது' என்பதில் விபுலானந்த அடிகளாருக்கும் கலாநிதி கணபதிப் பிள்ளைக்கும் ஒருமைப்பாடு நிலவியது. "பல்கலைக் கழகத்திலிருந்து கற்று வெளியேறும் மாணவன் எதையும் கற்கவில்லை. எப்படிக் கற்கவேண்டும் என்பதைக் கற்றே வெளியேறுகிறான்" எனக் கலாநிதி கணபதிப்பிள்ளை அடிக்கடி கூறுவார். கீழைத்தேயக் கல்வி மரபையும் மேலைத்தேயக் கல்வி மரபையும் இணைக்க அடிகளாரும் கலாநிதியும் பெரிதும் முயன்றனர். இதனால் எதிர்ப்புத் தோன்றியது. இவ்விரு பெரியாரும் இதனைப் பொருட்படுத்தவில்லை. விரிவுரையாளர் வி. செல்வநாயகம் மிகவும் கண்டிப்பானவர்; நறுக்கானவர்; எதனையும் 'உரைத்து நிறுத்துப்' பார்ப்பவர்? தலைசிறந்த இலக்கிய ஆய்வாளர்; விரிவுரையை நன்கு நிரை செய்து வருவார். இந்த மூவரிடமும் இருந்த நல்ல இயல்புகளை இளம் வித்தியானந்தன் தமக்காக்கிக் கொண்டார். இந்த இடத்தில் ஈழத்துத் தவில் வல்லார் வித்துவான் வி. தட்சணாமூர்த்தியின் நினைவுதான் வருகின்றது: எந்த வித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் தவில் வாசித்தாலும் இளம் வித்துவான் தட்சணாமூர்த்தி, அந்த வித்துவானின் தனித்திறமையைக் கிரகித்துத் தனக்காக்கிக் கொள்வார். அதேபோன்று முன்னர் குறிப்பிட்ட தமிழ்ப் பெரியார் மூவரின் திறமை எல்லாவற்றையும் விரிவுரையாளர் வித்தியானந்தன் பிடித்து வைத்துக்கொண்டார். இதுவே இவருக்குப் பிற்காலத்தில் பெரிதும் உதவியது.

### “ ஆளாக்கிய பெருமகன் ” :

மேற்குறிப்பிட்ட பெரியார் மூவரும் பேராசிரியர் வித்தியானந்தனின் ஆசிரியர்; மூவருக்கும் பேராசிரியர் வித்தியானந்தன் கடமைப்பட்டவர். ஆனால் பேராசிரியர் கணபதிப்பிள்ளை மீதுதான் பேராசிரியர் வித்தியானந்தனுக்குக் கூடிய ஈடுபாடு இருந்தது. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் உற்ற நண்பனாய், அந்தரங்கச் செயலாளராய், அபிமான மகனாய் பேராசிரியர் வித்தியானந்தன் இருந்தார். ஒருமுறை பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் அன்பர் ஒருவர் அவரைப் பார்த்து ''கீழைத்தேயக் கல்விப் பீடத்தின் அதிபதியாக நீங்கள் ஏன் வரக்கூடாது? அந்தப் பதவியை ஏற்றால் என்ன?'' என்று கேட்டார்.

''அந்தப்பதவி எனக்கு வேண்டாம். அதனை நான் விரும்பவில்லை. விரும்பி ஏற்றால் வித்திக்குத்தான் வேலை கூடும்; பாவம் வித்தி'' என்று நகைச்சுவையுடன் கணபதிப்பிள்ளை மறுமொழி சொன்னார்: உண்மையை விளங்க இதுவே போதும்; பல்கலைக்கழக நிருவாக வேலை, ஆராய்ச்சி வேலை, தமிழ்ச் சங்கப் பணி, ஆக்க இலக்கிய முயற்சி எல்லாவற்றிற்கும் பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கு அவரின் நல்ல மாணாக்கர் வித்தியானந்தன் உறுதுணையாக இருந்தார். நட்பிற்கும், அன்பிற்கும் இருவர் இவரே:



இரண்டு ஆண்டு காலம் திரு. வித்தியானந்தன் உதவி விரிவுரையாளராகத் திறமையுடன் கடமை புரிந்தார். பட்டதாரி மாணவர், விரிவுரையாளர், பேராசிரியர், ஆகியோரின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றார் இவர். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சேர். ஐவொர் யெனிஞ்சும் இவரின் திறமையை மட்டிட்டு அறிந்து வைத்திருந்தார். பேராசிரியர் கணபதிப்பிள்ளை வெற்றிலை போடுவதில் தனி இன்பம் காண்பார். அதனாலோ என்னவோ தெரியாது இளம் வித்தியானந்தனை, வெற்றிலைத் தோட்டக்காரன் வெற்றிலைக் கொடியை நன்கு வளர்த்துவிடுவது போல வளர்த்துவிட்டார். இரண்டு ஆண்டு முடிந்ததும் விரிவுரையாளர் வித்தியானந்தன், இலண்டன் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேய மொழிக் கல்விப் பீடத்தில் சேர்ந்து கலாநிதிப் பட்டம் பெறவேண்டும் எனக் குரு கணபதிப்பிள்ளை விரும்பினார். விபுலானந்த அடிகளார் மறைவின்பின் கலாநிதி கணபதிப்பிள்ளையே 1946ல் பேராசிரியரானார் என்பது இங்கு கவனிக்க வேண்டியது: ''இந்த ஆராய்ச்சிப் படிப்பை வித்தி இங்கு செய்தால் என்ன? அல்லது அண்டை நாடாகிய இந்தியாவிலே செய்தாலென்ன?'' என வித்தியானந்தனின் உறவினர் சிலர் கேட்டனர்; கிட்ட இருப்பதையே வித்தியானந்தனின் தாயும் உறவினரும் விரும்பினர். குடும்பத்திற்கு ஆறுதலாக இது அமையும் எனவும் கருதினர். வித்தியானந்தனின் எதிர்கால உயர்ச்சிக்கும், பல்கலைக்கழக எதிர்கால வளர்ச்சிக்கும் இலண்டன் ஆராய்ச்சிப்பயிற்சி இன்றியமையாதது எனப் பேராசிரியர் கருதினார்; கண்டிப்பாக இருந்தார்; தான் நினைத்ததையே கணபதிப்பிள்ளை சாதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆராய்ச்சிக் கல்வி :

இந்த முடிவுப்படி 1948ல் விரிவுரையாளர் வித்தியானந்தன் கடல் வழியாக இலண்டன் மாநகருக்குப் புறப்பட்டார்; அப்போதைய பல்கலைக்கழக விதிகளுக்கு ஏற்ப, பல்கலைக்கழகத் தமிழ்மொழி மாணவர் சார்பிலே விரிவுரையாளர் வித்தியானந்தனுக்குப் பல்கலைக்கழக வளவில் பிரியாவிடை ஒன்றை அளிக்க முடியாமலிருந்தது. ஆகவே இவரிடம் கற்ற மாணவரும், விரிவுரையாளரும், பேராசிரியர் பலரும் சேர்ந்து கொழும்பில் உள்ள பிரபல உண்டிச்சாலை ஒன்றிலே பிரியாவிடை நடத்தினர்; விரிவுரையாளர் வித்தியானந்தனுக்கு மாணவர் மத்தியில் இருந்த பெரும் செல்வாக்கை இந்தப் பிரியாவிடை எடுத்துக் காட்டியது. இந்தத் தனிச் செல்வாக்கு என்றுமே இவருக்கு இருந்து வருகின்றது.

இலண்டன் பல்கலைக் கழகத்திலே திரு. வித்தியானந்தனுக்கு உள்துறை வழிகாட்டியாக அறிஞர் அல்பிரட் மாஸ்ரர் (*Master*) அமைந்தார். ஆராய்ச்சிக் கட்டுரை மதிப்பீட்டாளராக இலண்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் தி. செ. பிலிப்சும், ஒக்சுபோர்ட்டுப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரி. பரோவும் இருந்தனர். "பத்துப் பாட்டு-வரலாறு, சமூகஇயல், மொழியியல் நோக்கு" என்னும் பொருளையே ஆராய்ச்சிக்காக வித்தியானந்தன் தெரிந்தெடுத்தார். இந்த ஆராய்ச்சி எவ்வித தங்கு தடையும் இன்றி நடந்தது. விரிவுரையாளர் வித்தியானந்தன் 1950இல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்; பெற்று ஈழம் திரும்பினார். இந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் பெருமதியை உணர்ந்த இலண்டன் பல்கலைக்கழகம் அதனை வெளியிட முன்வந்தது. இந்த ஆராய்ச்சிக் கட்டுரை ஆங்கிலத்தில் இருந்தது. "இதில் உள்ளவை நல்லவை. ஆகவே தமிழ் பேசும்



மக்களுக்கு இவை பயன்பட வேண்டும். இதனைத் தழுவி விரிவாகத் தமிழில் நூல் ஒன்று எழுத வேண்டும்" எனக் கலாநிதி வித்தியானந்தனின் நண்பர் சிலர் கேட்டனர்; வற்புறுத்தினர். இதன் பயனாகவே 'தமிழர் சால்பு' என்னும் தரமான நூல் வெளிவந்தது. இது நத்தை வேகத்திலே விலைபோயிற்று. இதன் பிரதிக் குவியல் வீட்டிலே முடங்கிக் கிடந்தது. இந்தப் பெரும் பாரத்தையும், பணச்செலவுப் பாரத்தையும் இல்லத்தரசி கமலாதேவி வித்தியானந்தன் உளம் உவந்து தாங்கிக் கொண்டார். பொருட்செலவைத் 'தமிழர்சால்பு' கொண்டுவந்தது. அதே நேரத்தில் அறிஞரின் பாராட்டையும் இந்தநூல் தேடிக் கொடுத்தது. இங்கு மூவரை மட்டும் குறிப்பிடலாம். மைசூர்ப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக இருந்து புகழ் ஈட்டிய கே. ஏ. நீலகண்ட சாத்திரி, சென்னைப் பல்கலைக்கழகத்து வரலாற்றுப் பேராசிரியர் ரி. வி. மகாலிங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் ஆர். சத்தியநாதையர்; இந்தப் புகழ்மாலையைக் கண்டு பேராசிரியர் கணபதிப்பிள்ளை பெரும் பூரிப்படைந்தார்.

## பதவி உயர்வு :

ஈழம் திரும்பிய கலாநிதி வித்தியானந்தன் 1950இல் இரண்டாம்தர விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்றார்; 1956இல் இவருக்கு முதலாம்தர விரிவுரையாளர் பதவி உயர்வு கிடைத்தது. 1967இல் ஆராய்ச்சித்துறைத் தலைவர் பதவி உயர்வும், 1970இல் பேராசிரியர் பதவியும் கிடைத்தன. கலாநிதிப் பட்டம், பதவி உயர்வு, எல்லாம் பெற்ற இவர் கல்வித்துறையிலிருந்து ஒதுங்கி வாழவில்லை. இப்படி ஒதுங்கி வாழ்வதும், பணம் ஈட்டுவதும், பிள்ளைகுட்டிகளுக்குப் பொருள் தேடுவதும் எம்நாட்டுப் பல்கலைக்கழகக் கல்விமான்கள் பலரின் வழக்கம்; ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் வித்தியானந்தன் கல்வியிலிருந்து கிடைப்பதே தலையாய இன்பம் என்பதை உணர்ந்தார்; இதில் இருந்து இவர் ஒருபோதும் வழுவவில்லை. 1977 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்து யாழ்ப்பாண வளாகத் தலைவரானார். 1978ஆம் ஆண்டிலே புதிய பல்கலைக்கழக அமைப்பு வந்தது. இதன்படி 1979 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகப் பதவி ஏற்றார். இற்றைவரையும் பொதுமக்களின், கழகங்களின், மாணவ மன்றங்களின் தொடர்பை இவர் துண்டிக்கவில்லை. பதவி, பட்டம், பெயர் புகழ் எல்லாம் இவரைத் தேடிவந்துள்ளன. இருந்தும் தமிழ் கூறும் நல்லுலகத்துடன் சேர்ந்து பிணைந்து வாழ்வதையே இவர் விரும்புகின்றார். தமிழியல் தொடர்பு சார்ந்த கூட்டங்களை இவர் பெரிது சிறிது எனப் பிரித்துப் பார்ப்பதில்லை. அவை எங்கு நடந்தாலும் போவார்; போனால் கூட்டம் முடியும் வரை இருப்பார். இடையிலே மேடையை விட்டுப் போகின்ற பழக்கம் இவருக்கு இல்லை.

## தமிழ்ச்சங்க வளர்ச்சி :

ஆராய்ச்சிக்காக இலண்டன் பல்கலைக்கழகம் செல்ல முன்னரே இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ச்சங்க வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டார். மாணவனாக இருந்த பொழுதே இந்தச் சங்க முயற்சி யாவற்றிலும் பெரும் ஆர்வத்துடன் பங்குகொண்டுள்ளார். தமிழ்ச்சங்க நாடக அரங்கேற்றங்களில் திரைக்குப்பின்னால் நின்று உழைத்த பெருமை " வித்தி " யைச் சாரும்; பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடக முயற்சிகளுக்கு வலதுகையாக இருந்தவரும் இவரே. சங்கத்தின் பெரும் தலைவராக இருந்தவர் கணபதிப்பிள்ளை; பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கும் மாணவருக்கும் இணைப்புப் பாலமாக அமைந்தவர் இளம் வித்தியானந்தன்; இந்தச் சங்கத்திற்குத் தனி



யான தமிழ் ஏடு ஒன்று இருக்கவேண்டும் எனப் பலரும் கனவு கண்டனர். அதில் கணபதிப்பிள்ளையும் வித்தியானந்தனும் இருவர். பட்டதாரி மாணவர் மத்தியில், இந்த ஏடு உருவாக வேண்டும் என்ற கருத்தை வளர்த்தவர் இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம். இவர் நல்ல நடிகர்; இளைஞன் அமிர்தலிங்கத்தின் காலத்தில் ஏட்டுக் கனவு நிறைவேறவில்லை. ஓராண்டு காலத்தின் பின்னர்தான் இக்கனவு நிறைவேறியது. பல்கலைச் சங்கத் தமிழ் ஏடாகிய " இளங்கதிர் " பிறந்தது ஒரு தனிக் கதை. அதனைத் தோற்றுவித்து முதல் ஆசிரியராக இருந்து உழைத்தபடியால், " இளங்கதிர் பிறந்த கதை " பற்றி எனக்குத் தெரியும். இந்த ஏடு வெளிவரும்போது விரிவுரையாளர் வித்தியானந்தன் இலண்டனில் இருந்தார். ஏட்டிற்குப் பெயரிடுதல், பதிப்பித்தல் போன்ற வேலைக்கு இவர் நல்ல ஆலோசனைகளை வழங்கினார். இதற்குத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆற்றிய பணி இம்மட்டன்று. சங்கத்தின் பொறியை வரைந்து தந்தவர் தொல்பொருளியல் திணைக்களத்தில் உயர் பதவி வகித்த கலைவல்லார் எஸ். சண்முகநாதன். இவரே இலங்கைப் பல்கலைக்கழகத்துப் பொறியையும் வரைந்தவர். பொறி அமைப்பு வேலை முடியாதபடியால் பொறி " இளங்கதிர் " முதல் இதழில் வெளிவரவில்லை. இளம் வித்தி கலாநிதிப் பட்டம் பெற்று இலங்கை வந்தார்; அதன் பின்னர் தமிழ்ச் சங்கப் பெரும் பொருளாளராக, தலைவராக இருந்து இவர் நற்பணி புரிந்தார்.

## பல்கலைக்கழக நாடகக்கலை வளர்ச்சி :

இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ச்சங்க வரலாற்றை இரண்டு கூறாகப் பிரித்துப் பார்க்கலாம். 1946ஆம் ஆண்டிற்கு முந்திய காலகட்டம் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டில் சங்கம் பொன்விழா நடத்திய காலகட்டம் வரை மற்றொன்று. சங்கத்தின் தொடக்க காலத்தில் கணிதப் பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பிரான்சிசு கிஞ்சுபரித்தேசிகர் ஆகியோர் தமிழ்ச்சங்க வளர்ச்சிக்கு நன்கு உழைத்து வந்தனர். இவர்களுடன் பின்னர் கலாநிதி கணபதிப் பிள்ளையும் சேர்ந்து கொண்டார். சங்கத்துடன் இரண்டறக் கலந்த இளம் கணபதிப்பிள்ளை தமிழ்ச் சங்க வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். இச் சங்கத்திற்காக இவர் எழுதிய ''நானாடகம்'' ''இரு நாடகம்'' ''சங்கிலி'' என்பன பின்னர் அச்சில் வந்தன. அச்சில் வராதவை இரண்டு. முன்னவை ஆறும் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் எழுதப்பட்டவை. ''சங்கிலி'' இலகுவான செந்தமிழில் தீட்டப்பட்டது. 1946ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரையும் பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் கணிபதிப்பிள்ளைக்கு உதவியும், தான் தனித்து நின்றும் தமிழ்ச்சங்க வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தார். இச்சங்கம் அரங்கேற்றிய பதினாறு நாடகங்களிலும் வித்தியானந்தனின் கைவண்ணம் இடம்பெற்றது. நிருவாகவேலை காரணமாகப் பேராசிரியர் கணபதிப் பிள்ளை நாடக எழுத்துத்துறையிலிருந்து ஒதுங்க வேண்டியதாயிற்று.

சிங்கள நாடகத்துறையில் தமிழிலிருந்து கிளைவிட்ட சிங்களக்கூத்து வடிவத்தை மரபு முறைகெடாமல் மெருகு கொடுத்தார் பேராசிரியர் சரச்சந்திரா. இதனால் அவருக்குப் பெரும் வெற்றி கிடைத்தது. சிங்களக் கூத்து வடிவம் தமிழிலிருந்து கிளைவிட்டது என்பதைப் பேராசிரியர் சரச்சந்திரா மிகவும் பெருந்தன்மையுடன் ஒப்புக் கொண்டுள்ளார். வடமோடி, தென்மோடிக் கூத்து வடிவங்கள் மட்டக்களப்பில்



வாழும் கலையாக, வளரும் கலையாக இருந்து வருகின்றன. வன்னிவள நாடாம் மன்னாரிலும் அப்படியான நிலையில் கூத்து இருந்துவருகின்றது; ஆனால் யாழ்ப்பாணத்தில் இது குற்றுயிராக இருந்தது. யாழ்ப்பாணத்துக் கொட்டகைக் கூத்தும் ஆதரவின்றி இருந்தது. இந்தக் கலைவடிவங்களின் பெருமையை உயர் மட்டத்தில் இருந்தவர் உணரவில்லை. இந்த வடிவங்களுக்குப் புத்துயிர் கொடுக்கவும் இந்த உயர்ந்தோர் குழாத்தினர் முன்வரவில்லை. கூத்துக் கலைக்கு, கலைஞருக்கு மதிப்புக்கொடுக்க இந்தக் குழாத்தினர் முன்வரவில்லை. பழைய அண்ணாவிமார் பழைய பாணியிலே சென்றனர்; மாற்றத்தை விரும்பவில்லை. வயது போன இந்த அண்ணாவிமாரைப் புதிய வழிக்குக் கொண்டுவருவது கடினம். இவர் பெரும்பாலும் பழமைவாதிகள். விடியவிடிய நடக்கும் கூத்தைச் சுருக்கிக் காலத்திற்கு ஏற்றபடி மரபு கெடாமல் களரி ஏற்றவந்தார் வித்தியானந்தன். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கூத்துக்கலை கைதேர்ந்த மாணவர் பலரும் இருந்தனர். இந்த மாணவரைக் கொண்டு '' கர்ணன் போர் '' '' நொண்டி நாடகம் '' '' இராவணேசன் '' '' வாலிவதை '' ஆகிய நாடகங்களைப் பேராதனையில் முதலில் அரங்கேற்றியவர் பேராசிரியர் வித்தியானந்தன். பின்னர் கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், தெல்லிப்பழை ஆகிய இடங்களிலும் அரங்கேற்றினார். தமிழ் நாடக வளர்ச்சியில் வித்தியானந்தனின் முயற்சி புதியதொரு யுகத்தை உண்டாக்கியது. இது விரிவாக ஆராயப்பட வேண்டிய அலுவல்.

வடமோடி, தென்மோடிக் கூத்துடன் வித்தியானந்தன் நிற்கவில்லை. இக்கலைபற்றிய தரம் வாய்ந்த ஆராய்ச்சி அரங்குகளை இவர் ஈழத்தின் பல பகுதிகளிலும் நடத்தினார். கட்டுரைகளை எழுதினார். இக் கட்டுரை பலவும் அச்சில் வந்தன. அதுமட்டன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்கலைபற்றிய ஆய்வு பலவற்றிற்கும் பேராசிரியர் வழிகாட்டியாக நின்றார். கொட்டகைக் கூத்து வடிவங்களுக்கும் இவர் புத்துயிர் கொடுக்க உதவினார். "மயான காண்டம்" "நந்தனார்" "சாவித்திரி சத்தியவான்" போன்ற கூத்துக்களும் வித்தியானந்தனின் உதவியுடன் பொலிவுற்று வளர்ந்தன.

நாடகம் அரங்கேற்றுவதுடன் வித்தியானந்தன் நிற்கவில்லை. நாடகம் மூலம் கிடைத்த சுத்த இலாபத்தைக் கொண்டு பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் ஆலோசனையுடன் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் படிப்பு மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கவும் வித்தியானந்தன் ஆவன செய்தார். இதன் விளைவாக அறக் கட்டளைகள் ஐந்து உருவாகின. ஐந்து பரிசில்கள் ஆண்டுதோறும் வழங்கப்படுவது மகிழ்ச்சிக்குரிய அலுவல். சிறுதுளி பெருவெள்ளம்.

**மணவினை :**

திருமணங்கள் சுவர்க்கத்திலேயே நிச்சயிக்கப்படுகின்றன என்பர். இக்கூற்றைப் பட்டதாரி மாணவர் மாற்றி, " திருமணங்கள் பல்கலைக்கழகங்களில் நிர்ணயிக்கப்படுகின்றன " என்பர். வித்தியானந்தனின் திருமணம் சுவர்க்கத்திலே நிச்சயிக்கப்பட்டுப் பல்கலைக்கழகப்மூலம் நிறைவேறியது எனலாம். பல்கலைக்கழகத்தில் தான் கண்டு காதலித்த மங்கை நல்லாள் செல்வி கமலாதேவி நாகலிங்கத்தைக் கலாநிதி வித்தியானந்தன் 1957இல் திருமணம் புரிந்தார். இவரின் திருமணம் ஒருவகையில் சீர்திருத்தத் திருமணம். தனித் தமிழில் ஈடுபாடுடைய "வித்தி" தன் திருமணத்தினை இப்படி அமைத்துக்கொண்டார். பிள்ளையார், மஞ்சல், குங்குமம், அறுகு, பால், தாலி எல்லாம் இடம்பெற்றன; ஆனால் பார்ப்பனர், வடமொழி மந்திரம், ஓமாக்கினி என்பன இடம்பெறவில்லை. பூசாரிகள் இரண்டுபேர் முக்கிய இடம்பெற்றனர். ஒருவர் வடமொழியிலும் தமிழிலும் கடல், மொழியியல் நிபுணர். மற்றவர் இலக்கிய வரலாற்றுக் கடல். முன்னவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. பின்னவர் பேராசிரியர் வி. செல்வநாயகம். இவ்விரு பெரியாரும் வாழ்த்துரை வழங்கத் திருமணம் இனிது நடந்தது. இருவரும் பிராமணர் அல்லாதோர். அந்தணர் குலத்தைச் சேராதவர்; ஆனால் அறவோர், நல்லாசிரியர். இவ்விரு பெரியோரும் வாழ்த்துரை வழங்கச், சாவகச்சேரியைச் சேர்ந்த நல்லாசிரியர் ஏ. வி. நாகலிங்கம் தன் நல்லமகள் கமலாதேவியை கலைமகிழ்நன் கலாநிதி வித்தியானந்தனுக்குக் கையளித்தார். நல்ல திருமணம் என ஆன்றோர் வாழ்த்தினர். அண்ணல் காந்தியை மகாத்மாவாக்கிய பெருமை அன்னை கசுத்தூரியைச் சேரும் என்பர். கலாநிதி வித்தியானந்தன், பேராசிரியராக, கலைமகிழ்நனாக, அனைத்துலக தமிழ் அறிஞராக உயர உதவியவர் வாழ்க்கைத் துணைவியார் கமலம். கூத்து உடுப்பைத் தயாரித்தல், கலைஞரை உபசரித்தல், கையெழுத்துப் பிரதியை ஆக்குதல், அச்சுப்பிழை பார்த்தல் போன்ற வேலை யாவும் கமலா அக்காவிற்குக் கரைந்த பாடம். அதுமட்டன்று. கூத்து ஒத்திகை யாவும் பேராசிரியர் வீட்டிலேதான் நடைபெறும். மத்தளம், பாட்டு, ஆட்டம், சலங்கை ஓசை, இடையிடையே மாணவ மாணவியரின் கூச்சல். இத்தனையையும் பொறுத்து நடந்து கொள்வது இலகுவான அலுவலன்று. கமலம் நல்லாசிரியர். ஆசிரியத் தொழிலுக்கு அணிகலமாகத் திகழ்ந்தவர். இவரின் அகால மறைவு பேராசிரியர் வித்தியானந்தனைப் பெரிதும் பாதித்தது. கமலா உண்மையில் வித்தியின் வாழ்க்கைத் துணைமட்டுமன்று; உற்ற நண்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிருவாகப் பொறுப்பு :

கொழும்பிலிருந்த பல்கலைக்கழகம் பேராதனைக்கு 1952இல் மாற்றப்பட்டது; இதனால் பல்கலைக்கழக ஆசிரியர் மாணவர் மத்தியில் அதிருப்தி நிலவியது; உணவு வசதிக்குறைவு, இடவசதிக் குறைவு, நூல் நிலைய அமைப்புக் குறைவு, தளபாட வசதிக்குறைவு இப்படியாகக் குறை பலவும் நிலவின. இவை உண்மையான குறைபாடு, மாணவர் மத்தியில் அகச் சார்புடைய குறைபாடு இருந்தது. சுறுசுறுப்பான கொழும்புநகர் எல்லா வசதியையும் கொண்டது. அதனை விட்டுத் தேயிலைத் தோட்டத்தின் நடுவில் அமைந்த பேராதனை வளாகத்தில் வந்து குடியேற மாணவர் விரும்பவில்லை. உளவியல் அடிப்படையில் மாணவர் புதிய மாற்றத்தை ஏற்க மறுத்தனர். இப்படியான தொல்லைபலவும் நிலவும் போது செயத்திலக மண்டபத்தின் பாதுகாவலர் பதவியை பேராசிரியர் உறட்டிறிக்கோ ஏற்றார்; தன் நல்மாணாக்கராம் கலாநிதி வித்தியானந்தனைத் துணைப் பாதுகாவலர் பதவியை ஏற்கும்படி கேட்டுக் கொண்டார். விடுதிக்குரிய தட்டுமுட்டுச் சாமான்களை வாங்குதல், தகுதியான பணியாளரை நியமித்தல், பொது மேற்பார்வை செய்தல், மாணவரின் பொழுதுபோக்கு சேமலாபம் என்பவை கடினமான அலுவல். இந்த வேலை கம்பத்தில் நடப்பது போன்றது. இந்தப் பதவியை ஏற்று இதனை 1957ஆம் ஆண்டுவரை கலாநிதி வித்தியானந்தன் திறம்பட நடத்தினார். விடுதி மாணவர் ஒருவர் ஆழ்ந்த நித்திரையில் நடப்பவர். இது ஒருவகை நோய். இந்த நோயாளியை மேற்பார்வை செய்வது பொறுப்பான அலுவல். இந்த நோயாளியைக்கூட வித்தி தன் நண்பனைப் போல நடத்தினார்; அவரின் படிப்பை வழிநடத்தினார். இதனால் இவருக்கு மேலும் பதவி உயர்வு கிடைத்தது.



ஈழத்தின் மிகப்பெரிய விடுதிச்சாலை என்று வர்ணிக்கப்பட்ட விசயவர்த்தன மண்டபத்தின் முதலாவது பாதுகாவலர் பதவி வித்தியைத் தேடிவந்தது. இப்பதவியை 1961ஆம் ஆண்டு தொடக்கம் 1965ஆம் ஆண்டு வரையும் ஏற்று நடத்தினார்.

## தேசியக் கலைப்பணி :

பல்கலைக்கழகத்திற்கு வெளியே ஈழத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் ஆற்றிய கலைப்பணி மிகவும் விரிவாக ஆராயப்பட வேண்டியது; அப்பணியை மேல்வருமாறு பிரித்துப் பார்க்கலாம். (1) இலங்கைக் கலைக்கழகத்தின் நாடகக் குழுமூலம் ஆற்றிய பணி (2) இலங்கைச் சாகித்திய மண்டலம் மூலம் செய்த இலக்கியத் தொண்டு (3) இலங்கைத் தேசிய நாடக நூற்கட்டளை நிறுவனத்தின் மூலம் செய்த ஆக்கவேலை (4) ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலை நிறுவனத்தின் இலங்கைக் கிளை மூலம் புரிந்த தொண்டு (5) பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்கள் மூலம் செய்த முன்னோடி வேலை. பேராசிரியரின் திறமைக்கு நிலையான சான்றாக இவை அமைந்துள்ளன.

வித்தியானந்தனின் நாடகப் புலமையையும் கலை ஆர்வத்தையும் திறமையையும் கண்ட கலைக்கழகத்தினர் இவரைத் தமது அவையின் உறுப்பினராக்கினர். அத்துடன் இக்கழகத்தின் நாடகக்குழுவின் தலைவராகவும் இருக்கும்படி அழைத்தனர். 1955ஆம் ஆண்டு தொடக்கம் 1969ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக இவர் இக்குழுவின் தலைவராக இருந்தார். இதன் மூலம் இவர் ஆற்றியபணி இலங்கைத் தமிழ்க் கலைவரலாற்றில் பெரும் திருப்பு முனையாக அமைந்தது. இக்காலத்தில் நாடகப் பிரதி எழுதும் போட்டி ஒழுங்காக நடைபெற்றது. தரமான நாடகங்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பரிசு வழங்கப்பட்டது. அரிய பிரதிகள் அச்சு வாகனம் ஏறின. புதிய பரிசோதனைகள் கலைத்துறையில் இடம்பெற்றன. புதிய உத்திகளை இவர் துணிந்து புகுத்தினார். இவர் வழிநடத்த சம்பூரண அரிச்சந்திரா மயானகாண்டமாகச் சுருக்கப்பட்டுப் பெரும் புகழ் ஈட்டியது. பக்த நந்தனார், சிதம்பர தரிசனப் பகுதியை மட்டும் காட்டும் பகுதியாகச் சுருக்கப்பட்டுப் புகழ்பெற்றது. கர்ணன் போர் போன்ற கூத்துகள் பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டது. இந்தக் கூத்துகள் தேசிய மட்டத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. தேசிய எழுச்சியையும் இந்தக் கலை அலை உருவாக்கியது. மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், கொழும்பு, மலையகம் போன்ற இடங்களுக்கு இந்தக் கலை அலை விரைந்து பரந்து சென்றது. ஈழத்தின் தனித்துவத்தையும் பெருமையையும் நிலைநாட்டும்வகையில் புதிய நாடகங்கள் தோன்றின. பாடசாலை நாடகப் போட்டி ஒழுங்காக நடைபெற்றது. கரகம், காவடி, புரவி ஆட்டம், வசந்தன், கப்பற்பாட்டுப் போன்ற மக்கள் கலை விழாக்கள் ஒழுங்காக நடைபெற்றன.

இப்படியான விழாக்கள் நடத்துவதுமூலம் வித்தியானந்தன் ஓர் உண்மையைக் கண்டுபிடித்தார்; கலை மன்றங்களுக்கு நிதி உதவி வழங்கினால் மட்டும் போதாது. கலைஞரைக் கௌரவித்தல் வேண்டும் என்பதே அந்த உண்மை. ஏற்கனவே நிதி உதவியை அரசாங்கம் வழங்கியது. மக்கள் கலைஞர் யாவரும் ஒரு வகையில் யானையைப் போன்றவர். தனது உடல் வலிமையை யானை ஒரு போதும் உணர்வதில்லை. அதனை ஊக்கப்படுத்தப் பாகன் ஒருவன் தேவை. அண்ணாவியார் போன்ற மக்கள் கலைஞர் தம் அருமை பெருமையை அறியாது வாழ்ந்தனர். இக் கலைஞரைப் பேராசிரியர் நன்கு மதித்தார். அதுமட்டன்று. மற்றவர்களும் இக் கலைஞரை மதிக்கச் செய்தார். இதற்



காகவே மன்னார், மட்டக்களப்பு போன்ற இடங்களில் அண்ணாவிமார் மாநாடுகள் நடந்தன; அண்ணாவிமார்களுக்குப் பொன்னாடை போர்த்தல் விழாக்களும் நடந்தன ‘கூத்தாடிகள்’ முதன்மை விருந்தினர் என்ற உயர் நிலைக்கு உயர்த்தப்பட்டனர். அண்ணாவியாரின் விவரங்களைத் திரட்டிய பெருமை வித்தியானந்தனைச் சாரும்.

அரிய கூத்து ஏட்டுப் பிரதிகள் யாவும் செல்லரிக்கும் நிலையில் இருந்தன. நாட்டார் பாடலைப் பொதுமக்கள் மறக்கும் நிலையில் இருந்தனர். எனவே இவற்றை அச்சேற்ற வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார் பேராசிரியர். இந்த முடிவின் பயனாக ஏழு ஏடுகள் அச்சேறின. இவற்றில் நாடகம் நான்கு; நாட்டார் பாடல் தொகுப்பு இரண்டு; அம்மானை ஒன்று; இவை யாவும் எதிர்காலத்தவருக்கு வித்தியானந்தன் அளித்த ''கலைச் சீதனம்''. இதனால் ஈழத்துக் கலைமடந்தை வலிவும் வனப்பும் பொலிவும் பெற்றார்.

தேசியக் கலைவாழ்வில் ஈடுபட்டிருக்கின்ற கலைஞர் பலரும் தொழிலாளர்; அல்லது உழவர். இவர்கள் பல்வேறு மதத்தையும் சேர்ந்தவர்; கத்தோலிக்கர், புரட்டசுத்தாந்துக்கள், சைவர், இசிலாமியர் எனவும் இவரைப் பிரித்துப் பார்க்கலாம். பெருமையான போக்கு, அகம்பாவம் போன்ற கெட்ட குணம் ''வித்தி'' யிடம் ஒருபோதும் குடிகொண்டதில்லை. சைவச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தாலும், கலைஞரைப் பொறுத்தவரையில் இவர் பெரும் தாராள போக்கையே கடைபிடித்து வருகின்றார். சாதிமதம் இனம் என்பவற்றைக் கடந்து இவர் நிற்கின்றார். இவற்றைக் கடந்து நிற்பதுமல்லாமல் தேசியக்கலைக் கூடாரம் ஒன்றை அமைத்துள்ளார். இதனால் கத்தோலிக்கப் புலவர், புரட்டசுத்தாந்துப் புலவர், யாழ்ப்பாணத்து வீரசைவக் கலைஞர், மட்டக்களப்புக் கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர், மலையகக் கலைஞர் எல்லோரும் மறுமலர்ச்சி காண ஒன்று திரண்டுள்ளனர். உழவர், கடல் தொழிலாளர், பூசாரி என்ற பாகுபாடுகளை மறந்தனர். வித்தியானந்தக் கலைக் கூடாரத்தில் ஒன்று சேர்ந்தனர். இவர் நடத்துகின்ற கலைவிழாக்கள், கருத்தரங்குகள் யாவற்றிற்கும் சிங்களக் கலைஞர், சிங்கள ஆராய்ச்சியாளர், ஐரோப்பியப் பார்வையாளர், ஆகியோர் அழைக்கப்பட்டனர்; இவ்விதம் அழைப்பைப் பெற்றுவந்து பயன் பெற்றனர். கலைஞர் எல்லோரும் உயர்ந்த நிலையில் உள்ளவர்; ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற கருத்து மேலும் வலுப்பெறப் பேராசிரியர் ஆற்றிய தொண்டு பெருமை வாய்ந்தது. இவரின் பரிந்துரைப்படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினர் கூத்துப் பலவற்றையும் ஒலிபரப்பிற்கு ஏற்றவாறு அமைத்து ஒலிபரப்பினர். மக்கள் கலைஞருக்கு வானொலியில் பாட, நடிக்க, ஆட வாய்ப்புக் கிடைத்தது பெருமளவில். பேராசிரியரின் பரிந்துரைகளை விளங்கி ஆவன செய்யக்கூடிய தயாரிப்பாளர், பணிப்பாளர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிகின்றனர். இவர்களில் பலர் பேராசிரியரின் மாணவர்கள். வித்திப்பாணியை நன்கு அறிந்தவர்.

அரசு ஆதரவு இன்னும் கூடுதலாகக் கிடைத்தால் பேராசிரியர் இன்னும் பெரிய சாதனைகளை நிலைநாட்டியிருப்பர் என்ற கருத்து அப்போது நிலவியது; பார்க்கப்போனால் இதில் உண்மையும் இருக்கின்றது. அரச ஆதரவு கிடையாத இடத்து சனசமூகநிலையம், கூட்டுறவு நிலையம், உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றையும் வித்தியானந்தர் நாடினார். தேசிய நாடக அறக்கட்டளை நிறுவனத்தில் 1965ஆம் ஆண்டு தொடக்கம் 1969ஆம் ஆண்டுவரை இவர் பணியாற்றினார். இவரின் ஆலோசனையை இந்த நிறுவனம் நன்கு பயன்



படுத்தியது. இவரின் கலைத்தொண்டை இந்த நிறுவனம் நன்கு உணர்ந்தது. வித்தியின் திட்டங்களை நிறைவேற்ற இந்த நிறுவனம் உதவியது; ஆனால் இங்கும் மானிய உதவி வழங்குவதுபற்றிய சில தொல்லைகள் ஏற்பட்டன. இருந்தும் இவர் சோர்ந்து போவதில்லை.

இலங்கைச் சாகித்திய மண்டல உறுப்பினராக இருந்து தரமான இலக்கிய வளர்ச்சிக்கு வித்தியானந்தன் உதவியுள்ளார். சமகால இலக்கிய வளர்ச்சியில் ஈடுபாடு இருக்க வேண்டும். இப்படி ஈடுபாடு இல்லாத சமுதாயம் தன்னைத்தானே தாழ்த்திக்கொள்ளும் என்ற கோட்பாடு பேராசிரியரிடம் என்றும் இருந்து வருகின்றது. இந்தக் கோட்பாடு இல்லாத பலரும் எமது மத்தியில் வாழ்ந்து வருவது வருத்தத்திற்குரிய அலுவல் எனப் பேராசிரியர் கலையருவி கணபதிப்பிள்ளை கூறுவார். இந்தத் தவறு தன்னில் ஏற்படக்கூடாது என வித்தி பலமுறையும் கூறுவார். சமகால இலக்கியம் பற்றி உணர்ந்தும் உணராதவர்போலப் பலர் இருந்தனர். பலர் உரைத்ததையும் விளங்கியும் விளங்காதவர் போலவும் இருந்தனர். ஈழத்து எழுத்தாளரின் படைப்பு யாவும் நூல் வடிவில் வரவேண்டும், ஈழத்திற்குத் தனித்துவம் ஒ று இருக்க வேண்டும் என்பதனை வித்தியின் பேச்சிலே, எழுத்திலே பரக்கக் காணலாம். ஈழத்துத் தரமான படைப்புகளுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு ஆண்டுதோறும் வழங்கப்பட வேண்டும் என்ற கண்டிப்பான கருத்துடையவர் பேராசிரியர். பேச்சுத் தமிழில் எழுகின்ற நாடகம், சிறுகதை, ஒருகள நாடகம், கவிதை நெடுங்கதை எல்லாம் தமிழ் இலக்கியப் பரப்பில் அடங்கும் என்ற கருத்தைக் கடந்த நாற்பதாண்டுகளாக வலியுறுத்தி வந்துள்ளார் இவர். இன்று இவரின் கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய அலுவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துக் கலை இலக்கிய வாழ்வில் புத்தம்புதிய யுகம் ஒன்றை ஏற்படுத்த முயன்றவர் அவர். அந்தச் சிலரில் அதிமுக்கியமான இடம் பெறுபவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. அந்த யுகத்திற்குப் புதியவேகம் கொடுத்ததில் முக்கியமானவர் பேராசிரியர் வித்தியானந்தன்.

1946ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரைக்கும் ஈழத்தின் இலக்கியத் தனித்தன்மை துலக்கம் பெற வித்தியானந்தன் அயராது உழைத்து வருகின்றார். இப்போது துணைவேந்தராகப் பணிபுரியும் இவர் முன்னர்போல கலை இலக்கிய வாழ்வில் ஈடுபட நேரம் இல்லை என இவரின் நண்பர் பலரும் கவலுவர். நிருவாகப் பொறுப்புடன் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் பொறுப்பையும் பெருமளவில் இவர் ஏற்று நடத்தி வருகின்றார் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

## சாகித்திய மண்டலப் பரிசு :

"தோல்வியுற்ற எழுத்தாளர் பின்னர் இலக்கிய ஆய்வாளராக மாறுவது வழக்கம்". இப்படியான கூற்று ஒன்று இலக்கியப் படைப்பாளர் மத்தியில் நிலவுகின்றது. ஆனால் பேராசிரியர் வித்தியானந்தன் வெற்றியுடன் திகழும் எழுத்தாளர். கைதேர்ந்த எழுத்தாளர்; ஆராய்ச்சியாளர்; கலைஞர்; இவருக்கு இரண்டு முறை இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. பிறை அன்பன் என்ற புனை பெயரில் இவர் எழுதிய "கலையும் பண்பும்" நூலுக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. 1984 இல் இவரின் "தமிழியற் சிந்தனை" என்ற நூலுக்கும் அதே பரிசு கிடைத்தது. இது பாராட்டப்பட வேண்டிய அலுவல்.



## வெளிநாட்டுக் கலைத் தூது :

பேராசிரியர் வித்தியானந்தனின் கலைத்துறைச் சாதனை அவருக்கு அனைத்துலகப் புகழை ஈட்டியது. இதனால் வெளிநாடுகளும் இவரின் பெருமையை உணரத் தொடங்கின. இதன் பயனாக இவர் 1960 — 61 ஆம் ஆண்டுகளில் ஈழத்தின் தனிப்பெரும் கலைத்தூதுவராகச் சென்றார். தெற்கு இங்கிலாந்து, வேல்சு ஆகிய பகுதிகளில் நிலவும் மக்கள் கலைபற்றிய ஆய்வு ஒன்றை நடத்தும்படி பெரிய பிரித்தானியக் கலைக் கழகம் அழைப்பு ஒன்றை அனுப்பியது. ஆராய்ச்சி செய்வதுடன் இங்கிலாந்தின் பல நிறுவனங்களில் இவர் ஆய்வுரைகளை நிகழ்த்தினார். இவரின் புலமை நிபுணர்கள் பலரையும் கவர்ந்தது. யூகோசிலாவியா அரசாங்க அழைப்பை ஏற்று அந்த நாட்டிலும் ஆய்வையும் விரிவுரையையும் நடத்தினார். இதன் பின்னர் ஐக்கிய அமெரிக்கா, யப்பான், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் சென்று கலைத் தூதுவராகப் பணிபுரிந்தார். எதனையும் திட்டமிட்டு மிகவும் நுணுக்கமாகச் செய்கின்ற இயல்பு பேராசிரியரிடம் உண்டு. ஆகவே கலைத்தூதுவராகச் செல்லும்போது ஒலிப்பதிவு நாடா பலவற்றையும் தம்முடன் எடுத்துச் சென்றார். அளவெட்டி, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மன்னார், மட்டக்களப்பு, மலையகம் ஆகிய எல்லாப்பகுதிகளுக்கும் சென்று மக்கள் கலைச் செல்வத்தை ஒலிப்பதிவு செய்தார். இந்த ஒலிப்பதிவுகளுக்குரிய விளக்கவுரையை மிகவும் தெளிவாகத் தயார் செய்தார். இந்த முன்னோடி முயற்சிக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்புக் கிடைத்தது. வாசிங்டன் பல்கலைக்கழகம் போன்ற நிலையங்களில் இந்த ஒலிப்பதிவு நாடாக்கள் பேணி வைக்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியது. பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இவரின் ஒலிப்பதிவுகளைக் காலத்துக்குக் காலம் ஒலிபரப்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆராய்ச்சி வழிகாட்டி :

கலைமகிழ்நன் வித்தியானந்தன்; அதுமட்டன்று: ஆராய்ச்சித் துறையில் '' யான் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறவேண்டும் '' என்ற உயர்ந்த நோக்குடன் இவர் வாழ்ந்து வருகின்றார்; இதனால் இவர் ஈழத்து ஆராய்ச்சி மாணவருக்கு உதவ எந்த நேரமும் தயாராக இருக்கின்றார். ஆராய்ச்சி மாணவருக்கு இவரின் சொந்தப் படிப்பகம் எப்போதும் திறந்தபடியே இருக்கும். தன்னிடம் உள்ள அறிவை எல்லோருக்கும் அன்புடன் வழங்குவார். ஆராய்ச்சி நூல், அருஞ்சுவடி, பழைய சஞ்சிகை, நறுக்குகள் பலவும் இவரிடம் இருக்கின்றன. இவற்றை வைத்துக்கொண்டு இரவல் கொடுக்காமல் ''இல்லை'' என்கின்ற வழக்கம் இவரிடம் இல்லை. இதனால் இவர் பலவற்றையும் இழந்துமிருக்கின்றார். இரவல் வாங்கியவர் பலரும் வாங்கியதைத் திருப்பிக் கொடுப்பதில்லை எனக் கவலைப்படுவார். இருந்தும் இரவல் கொடுப்பதை ஒருபோதும் நிறுத்தமாட்டார். இவர் வழிகாட்டிய மாணவர் பலரும் இன்று பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் இருக்கின்றனர். பெரும் புகழையும் ஈட்டியுள்ளனர்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை ஆராய்ச்சியாளர் யாவரும் எமது நாட்டின் கலை வளர்ச்சி பற்றி நன்கு ஆராயவேண்டும் என்ற கொள்கை பேராசிரியரின் உள்ளத்தில் குடிகொண்டுள்ளது. அதே நேரத்தில் சமகால இலக்கியம் பற்றி ஆராய வேண்டும் என்ற பெரும் எழுச்சியும் இவரிடமுண்டு: 1950இல் தன் ஆராய்ச்சியை இலண்டனில் முடித்துக் கொண்டு நாடு திரும்பிய இவர் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கின்ற பெரும் பழுவையும் பெருமளவில் மேற்கொண்டார்; அத்துடன் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபடும் மாணவரையும் ஊக்கப்படுத்தி நெறிப்



படுத்தினார். பேராசிரியரின் புலமை பன்முகமானது: சாதி சமயம் இனம் என்ற குறுகிய வட்டங்களில் இது இயங்குவதில்லை. கலாநிதிப் பட்டம் பெற்று நாடு திரும்பிய இவரின் ஆராய்ச்சி வழிகாட்டல் வேலை '' முசிலிம் தமிழ் இலக்கியம் '' என்னும் பொருளுடன் தொடங்கியது. இதனை மேற்கொண்டவரைப் பேராசிரியர் பெரிதும் ஊக்கப்படுத்தினார். தமிழ் நாட்டில்கூட இந்த ஆராய்ச்சி அப்போது சரியாக மேற்கொள்ளப்படவில்லை. சிலரின் மேடைப் பேச்சு, கட்டுரை போன்றவற்றில் மட்டும் இசிலாமியரின் தமிழ்த்தொண்டு தொட்டுக் காட்டப்பட்டது. தமிழ் வளர்ச்சிக்குச் சமணர், பௌத்தர், கிறித்தவர் ஆற்றிய தொண்டு போன்றது இசிலாமியரின் தொண்டு என்பதை ஆராயப் பேராசிரியர் பெரிதும் உதவினார். இசிலாமியரின் தமிழ்த்தொண்டு என்றால் அது '' சீறாப் புராணம் மட்டும் '' என்ற கருத்து ஒரு காலத்தில் நிலவியது. இதனை அகற்றிய பெருமை இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கே உரியது. இதற்கு முன்னோடியாக இருந்து உதவியவர் வித்தியானந்தன். இது பாராட்டப்பட வேண்டிய அலுவல். அதுமட்டன்று: ''ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி'', ''ஈழத்துப் பத்திரிகை வளர்ச்சி'' ''ஈழத்து தமிழ் நாவல் வளர்ச்சி'' போன்றவை ஆராய்ச்சியாளருக்குரிய அரும் பெரும் பொருள். இவற்றைத் தெரிந்து எடுத்து முதுமாணி, கலாநிதி போன்ற பட்டப் பின்படிப்பிற்கு ஆய்வு செய்யும்படி தன் மாணவரைப் பேராசிரியர் தூண்டியுள்ளார்; வழிகாட்டியுள்ளார். தமிழைப் பொதுப் பாடமாகவும், சிறப்புப் பாடமாகவும் கற்றுத் தேறுகின்ற பட்டதாரிகள் தமிழைத் தொடர்ந்து கற்பதில்லை; ஆராய்ச்சி செய்வதில்லை. அரசாங்க உத்தியோகத்தில் ஈடுபட்டுச் சொகுசான வாழ்வைத் தேடிப் போய்விடுவர் எனப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அந்தக் காலத்தில் கவலைப்படுவார். இந்தக் கவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் போக்கும் வகையில் பேராசிரியர் வித்தியானந்தனின் ஆராய்ச்சி வழிகாட்டல் அமைந்துள்ளது. இப்படி வழிகாட்டியவர் சிலர். அந்தச் சிலரில் தலையாய நிலையில் இருப்பவர் 'வித்தி' என்றால் அது ஒருபோதும் மிகைபடு கூற்றாக அமையாது. இப்படியாக ஆராய்ச்சியை வளர்த்துவிடுவது இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு நல்ல அறிகுறி.

மேல்நாட்டுப் புலமையிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ள பேராசிரியர் வித்தியானந்தன் எமது நாட்டில் நிலவுகின்ற பாரம்பரியக் கல்விமுறையை ஒருபோதும் மறந்திலர். இந்தப் பாரம்பரியக் கல்விமுறைப் பிரதிநிதிகளான பண்டிதர் வித்துவான் பலரும் சில வேளைகளில் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, வரலாற்றுத்துறை, இந்துப் பண்பாட்டுத்துறையைக் காரசாரமாக விமர்சனம் செய்வதும் உண்டு. இதனைப் பேராசிரியர் வித்தியானந்தன் பொருட் படுத்துவதில்லை. பேராசிரியர் கணபதிப்பிள்ளை எடுத்த பெரும் முயற்சியினால் பண்டிதர்கள், சித்தாந்த அறிஞர்கள் சிலர் பகுதிநேர விரிவுரையாளர்களாக அந்தக் காலத்தில் விரிவுரை நிகழ்த்தினர். இவர்களுடன் பேராசிரியர் வித்தியானந்தன் நன்கு பழகுவார். அத்துடன் அவர்களின் புலமையையும் நன்கு மதித்தார். இவர்களின் பேச்சை, கட்டுரைகளை நன்கு ஆராய்வார். இதனாலேதான் தமிழை மரபுவழி நின்று கற்றுத் தேறியவர்களுக்கு ''இலக்கிய கலாநிதி'', ''இலக்கண வித்தகர்'' போன்ற பட்டங்களை வழங்கவேண்டும் எனப் பேராசிரியர் வித்தியானந்தன் வலியுறுத்தினார்; அதில் வெற்றியும் கண்டார்

இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் சிங்களத் துறை இரண்டும் இணைந்து ''வித்துவான்'' சான்றிதழுக்கு நிகரான படிப்பைத் தொடங்கின. இந்த முயற்சி பெரிதும் வரவேற்கத்தக்கது: இந்தப் படிப்பு



நெறிக்கு மாணவரைத் தெரிவு செய்தல், பாடநெறி, பாடநூல் தெரிவு என்பவற்றிற்குப் பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கு உறுதுணையாக இருந்தவர் பேராசிரியர் வித்தியானந்தன் உதவினர்; ஆனால் இந்தப் படிப்புநெறி சிக்கல் பலவற்றையும் ஏற்படுத்தியது. பல்கலைக்கழகப் பாட நெறியைப் பின்பற்றிப் படித்தவர்களுக்கு உயர்ந்த சம்பளமும், தமிழ் சிங்களப் பண்டிதர்களுக்குக் குறைந்த சம்பளமும் வழங்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இது சிக்கல் ஒன்று. இன்னும் சிக்கல் பல எழுந்தன. இதனாலோ என்னவோ தெரியாது இந்தக் கற்கை நெறியைப் பல்கலைக்கழகம் கைவிட்டது. நல்லதொரு முயற்சி கைவிடப்பட்டது என அப்போது பலரும் கவலைப்பட்டனர்.

இலங்கைப் பல்கலைக்கழகத்துப் பேராதனை வளாகத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் பணிபுரிந்து வந்தார். அந்தக்காலம் தொடக்கம், வித்தியாலங்கார வித்தியோதய வளாகங்களில் நடந்த ஆராய்ச்சித் துறை முயற்சிகளுக்கும் இவர் உதவி வந்தார். இவரின் புலமையை நன்கு உணர்ந்தன சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம், மலேசியப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்; எனவே வித்தியானந்தனைத் தமது ஆராய்ச்சிப் பிரிவில் மாணவரின் வெளிநாட்டு வழிகாட்டியாக நியமித்தன; அதுமட்டன்று. இங்கிலாந்து பல்கலைக்கழகத்திற்குரிய தேர்வுகளுக்குப் பாடநூல்களைத் தெரிவு செய்வதற்கு இவரின் துணையை அந்தரங்கமாக நாடினர். வித்தியானந்தனின் அறிவுறுத்தலின் பெயரிலேயே பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் ''மாணிக்க மாலை'' என்னும் நூல் 1951இல் அப் பல்கலைக்கழகத்திற்குரிய தேர்வுப்பாட நூலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேடைப் பேச்சாளர் :

முன்னர் சுட்டிக்காட்டியதுபோலப் பேராசிரியர் வித்தியானந்தன் தமிழ் பேசும் பொது மக்களின் தொடர்பை ஒருபோதும் மறந்தாரில்லை. இதனாலே தான் இவர் ஈழத்தின் பல பாகங்களிலும் இருந்து வருகின்ற அழைப்பை ஏற்று மேடைகளில் உரையாற்ற அவ்வப்போது செல்வார். கல்லூரிப் பரிசளிப்பு விழா, இலக்கிய விழா, நாடக விழா போன்றவற்றிற்கு எல்லாம் விழா அமைப்பாளர் பலரும் இவரைப் பெரிதும் விரும்பி அழைப்பர். இப்படியான பேச்சுக்களில் அறிவு, ஆற்றல், புலமை, அழகு எல்லாம் நிரம்பி இருக்கும். இந்தப் பேச்சுக்கள் யாவும் ஈழத்துச் செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளன. மிகவும் சிக்கலான ஆராய்ச்சி அலுவல் பலவற்றையும் பொதுமக்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் பேராசிரியர் விளக்குவார்; மாணவருக்கு அறிவுரை பலவற்றையும் வழங்குவார். பேச்சிலே நகைச்சுவை நிரம்பியிருக்கும். கூட்டத்தை அமைப்பவர் பெரியவரா சிறியவரா என்பது பற்றிய கவலை இவருக்கு இல்லை. நல்ல முயற்சிக்காகவே கூட்டம் நடக்கிறது எனக் கண்டால் அழைப்பை அன்புடன் ஏற்றுக்கொள்வர்.

தமிழில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும் இவர் சிறந்த பேச்சாளர். தமிழ் நாடகக் குழுவின் தலைவராக இவர் பணியாற்றிய காலத்தில் ஆங்கிலத்தில் உரையாற்றுவார். தமிழ் தெரியாத அமைச்சர், கலாச்சார அமைச்சின் உயர் அதிகாரிகள் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், பார்வையாளர்கள் போன்றோர் விழாவிற்கு வருகை தருவர். இவர்களுக்கு விளங்கும் வகையில் மிகவும் சுருக்கமாகத் தெளிவாக ஆங்கிலத்தில் உரை நிகழ்த்துவார் இவர். இப்படி இவர் நிகழ்த்திய கலை விளக்கவுரை பலவும் வெளிநாட்டவரின் பாராட்டைப் பெற்றுள்ளன. இப்படி இவரைப் பாராட்டியவரில்



ஒருவர் இலண்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரி லெவி. அரிச்சந்திர மயானகாண்டத்திற்குப் பேராசிரியர் வித்தியானந்தன் நிகழ்த்திய விளக்கவுரை புகழ்வாய்ந்தது. பேராசிரியர் வித்தியானந்தன் நிகழ்த்திய முக்கியமான மேடைப் பேச்சுக்களைத் தொகுத்து ஆராய்வது பயனுள்ள முயற்சியாகும்.

## வானொலியில் வித்தி :

பேராசிரியர் வித்தியானந்தன் வானொலியில் நிறையப் பேசியுள்ளார். இவர் நிகழ்த்துகின்ற வானொலிப் பேச்சு யாவும் இவரின் தனி முத்திரையைப் பெற்றிருக்கும். வானொலிப் பேச்சு யாவும் பெரும்பாலும் பொதுமக்களுக்கே உரியவை. சாதாரண நேயர் ஒருவரை உள்ளத்தில் வைத்துப் பேராசிரியர் தன் பேச்சுக்களை எழுதுவார். அதே நேரத்தில் இவரின் பேச்சு யாவும் கற்றவர்களுக்கும் பெருவிருந்தாக அமையும். குறிப்பாக இவர் வானொலியில் கூத்துக்கலை பற்றி நிகழ்த்திய பேச்சுப் பொது மக்களுக்கும் பெரும்பயன் தருபவை; கூத்துக் கலைஞரைத் தூண்டிவிடுபவை; அறிஞருக்கு இவை பெரு விருந்து. கூத்துக்கலைபற்றிய விழிப்புணர்ச்சியை இப் பேச்சு யாவும் ஏற்படுத்தியுள்ளன. ஈழநாட்டில் வாழ்ந்த கலைப்பெரியார் பற்றிய இவரின் பேச்சு யாவும் மதிப்பீடாக அமைந்துள்ளன. இவை தவிர இலண்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய '' தமிழ் ஓசை '' போன்ற நிகழ்ச்சி பலவற்றிலும் வித்தியானந்தன் பேசி எல்லோரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

இன்று இலங்கை வானொலியில் கூத்து, மக்கள் கலை பற்றிய உரைகளும் கலந்துரையாடல்களும் ஒழுங்காக நடைபெறுகின்றன. இது பெருமைக்குரிய அலுவல். இப்படியான முயற்சிக்குப் பெரும் அளவில் முன்னோடியாக அமைந்தவருள் முக்கியமாக அமைந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியானந்தன். இவரால் மெருகு ஊட்டப்பட்ட கூத்துக்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அந்தக் காலத்தில் ஒலிபரப்பியது. கூத்துக் கலைஞர் பலரும் வானொலிக்கு இவரால் அறிமுகஞ் செய்யப்பட்டவர். இப்பொழுது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் வெளிக்கள ஒலிப்பதிவுப் பொறுப்பாளர், கலைஞர் வாழும் பகுதிகளுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்புகின்றனர். இப்படியான நல்ல முயற்சியாவும் பேராசிரியர் வித்தியானந்தனின் உள்ளத்தைக் குளிரச்செய்யும் என்பதில் ஐயமில்லை. தான் தொடக்கி வைத்த முன்னோடி முயற்சி இன்று பரந்து விரிந்து நிற்கின்றது என்பது பற்றி இவர் பூரிப்படைவார்.

**கட்டுரை ஆக்கம் :**

இவரின் முதலாவது கட்டுரை முதலாவது "இளங்கதிர்" ஏட்டிலே வெளிவந்தது. இந்த ஏட்டை இலங்கைப் பல்கலைக்கழகத்துச் தமிழ்ச் சங்கச் சார்பிலே தோற்றுவித்து முதற் பதிப்பை வெளிக்கொணரும் பெரு வாய்ப்பு எனக்கு 1949இல் கிடைத்தது. பேராசிரியரின் இந்தக் கட்டுரை தரமாக இருந்தது. ஈழ நாட்டவர் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டை இக் கட்டுரையில் ஆராய்ந்தார். இக் கட்டுரையைத் தொடர்ந்து இன்று எத்தனையோ கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். இக் கட்டுரை யாவும் இவரின் அறிவு, பேராற்றல், சிந்தனைத் தெளிவு ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. அத்துடன் இலகுவான செந்தமிழ் உரை நடைக்கும் இக் கட்டுரை யாவும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. ஈழத்தின் தனித்தன்மை போற்றப்பட வேண்டும் என்ற கோட்பாடு இளம் வித்தியானந்தனின் உள்ளத்தில் குடிகொண்டது. இந்தக் கோட்பாட்டை உருவாக்கி அதனை வித்திக்குக் கையளித்தவர் பேராசிரியர் கலையருவி கணப



திப்பிள்ளை. இந்தக் கோட்பாட்டை விரித்து வளர்த்து விட்டார் பேராசிரியர் வித்தியானந்தன். தன் முதலாவது கட்டுரையிலேயே வட எழுத்தை வித்தியானந்தன் தவிர்த்துவிட்டார். இங்ஙனம் கட்டுரை ஆக்க இலக்கிய உலகிற் புகுந்த பேராசிரியர் வித்தி, இதன் மூலம் பெரும் சாதனை ஒன்றை நிலைநாட்டினார். கடந்த முப்பத்தைந்து ஆண்டு காலமாக எத்தனையோ கட்டுரைகளை எழுதினார். இவற்றைத் தொகுத்து ஆராய்தல் பயனுள்ள முயற்சி. இலண்டன் மாநகரிலிருந்து ஆராய்ச்சிக் கல்வியை முடித்துக்கொண்டு வந்த கலாநிதி வித்தி தன் இலண்டன் மாநகர நினைவுகளையும் பிரயாண அனுபவங்களையும் விரித்து எழுதினார். இவை "தினகரன்" ஞாயிறு ஏட்டிலே வெளிவந்தன. அப்போது நான் இந்த ஏட்டிலே சிலகாலம் பணிபுரிந்தேன். கட்டுரையைக் கலாநிதியிடமிருந்து பெறுதல், அச்சேற்றுதல் எல்லாம் என் பொறுப்பு. இத்துறையில் கட்டுரை ஆக்க முயற்சிக்கு வழிகாட்டியாக வித்தியானந்தன் இருந்தார். வித்தியின் கட்டுரைகளுடன் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் உவைசு, சோமசுந்தரப்புலவர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோரின் கட்டுரைகளையும், பாட்டுக்களையும் பெற்று வெளியிடுகின்ற அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை என் பேறு.

பேராசிரியர் வித்தியானந்தனின் கட்டுரைகள் பலவற்றிலும் தனித்தன்மை மிளிரும். பொதுமக்களுக்கும் ஆராய்ச்சி மாணவருக்கும் இவரின் கட்டுரை பெரிதும் பயன்படுகின்றன. இங்கிலாந்திலிருந்து திரும்பிய இளம் வித்தி இங்கிலாந்து மக்களுடைய நற்பண்புகளைப் படம்பிடித்துக் காட்டினார். எமது வாழ்க்கையையும் அவர்களுடைய வாழ்க்கையையும் ஒப்பிட்டார். இப்படியான ஒப்புநோக்கில் ஆழ்ந்த சமுதாயப் பார்வையும், மெல்லிய நகைச்சுவையும் இழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி இருக்கும். இவரின் உரைநடை மிகவும் எளிமையானது, இனிமையானது. இதனுலேதான் இவருக்கு இரண்டு வெவ்வேறு முறைகளில் இலங்கைச் 'சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. அதுமட்டன்று; பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை போன்ருேரின் பாராட்டையும் இவரின் கட்டுரைகள் பெற்றன.

வடமொழியில் பேராசிரியர் வித்தியானந்தனுக்கு வெறுப்புக் கிடையாது. தூய தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது வடமொழிற் சொற்களைக் கடன் எடுப்பது இவருக்குப் பிடிக்காத அலுவல். வலிந்து வலிந்து மணிப்பிரவாள நடையைக் கையாள்வதையும் இவர் விரும்ப மாட்டார். யாழ்ப்பாணத்தை '' வீஞகானபுரம் '' என்பது நகைப்புக்குரிய அலுவல் என்பர். தமிழ் நாட்டிலே ஆங்கிலச் சொற்களைப் பிழையாக உச்சரித்துப் பிழையாக அவற்றைத் தமிழில் எழுதுவதை இவர் ஒருபோதும் விரும்ப மாட்டார். அதற்கு எடுத்துக்காட்டாக '' காபி, டீ, பாட்டில் '' என்ற சொற்களைத் தருவார். இவற்றின் சரியான ஆங்கில உச்சரிப்பு ''கொபி'' ''ரீ'' ''பொட்டில்''. இந்த ஆங்கிலச் சொற்கள் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் கோப்பி, தேநீர், போத்தல் என இருப்பதை இவர் சுட்டிக்காட்டுவார். யாழ்ப்பாணத்தில் இந்த ஆங்கிலச் சொற்கள் சரியாக உச்சரிக்கப்பட்டு, பின்னர் பேச்சு வழக்கில், எழுத்து வடிவில் செந்தமிழ் குன்ருத வடிவம் பெற்றுள்ளன.

ஒரு காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் நெடுங் கணக்குக்கூடச் சற்றுத் தெரியாதவர் தமிழைக் கற்றனர். இதனுல் பாடநூல்களை எழுத்துக் கூட்டி வாசித்துப் படிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனுலேதான் வித்தியானந்தன் இலகு தமிழில் எழுதுவதைப் பெரிதும் விரும்புவார். இங்கிலாந்துப் பிரதமராக இருந்த சேர்வின்சிற்றன் சேர்ச்சில் என்பார்



தனது யுத்தகாலச் சொற்பொழிவிலே இலகுவான ஆங்கில நடையையே கையாள்வார்; ஆனுல் இவரின் உரைநடை மிகவும் வன்மை வாய்ந்தது. கேட்போரைத் தட்டி எழுப்ப வல்லது இரண்டாவது உலகப் பெரும்போரில் பெரிய பிரித்தானியாவிற்கு வெற்றி ஈட்டித்தரச் சேர்ச்சிலின் சொற்பொழிவு பெரிதும் உதவியது. இந்த எடுத்துக் காட்டைப் பேராசிரியர் வித்தியானந்தன் பலமுறையும் சொல்வார்.

## ஈழத்தின் தனித்தன்மை :

எல்லாத் துறைகளிலும் ஈழத்துத் தனித்தன்மை கட்டிக் காக்கப்படவேண்டும் என்பது பேராசிரியரின் பெரும் நம்பிக்கை; ஆனுல் இது தமிழ் நாட்டை வெறுப்பதாக அமைவதில்லை. தமிழ் நாட்டிலே மறைந்துபோன சொல்வழக்கு, சமுதாயப் பழக்க வழக்கம், கலை வடிவம் பலவும், ஈழத்தில் இன்றும் நிலவுகின்றன என்பதை வித்தியானந்தன் அழுத்திக் காட்டுவார். ஈழநாட்டினர் எழுதிய நூல்களைக் காப்பது எமது கடமை என்பார் இவர். ஈழத்துப் புலவர் எழுதிய கூத்து நூல்களை ஏட்டு வடிவில் இருந்து அச்சுவடிவிற்குக் கொண்டுவந்த பெருமை வித்தியானந்தனைச் சாரும். மன்னர் மாதோட்டப் புலவர் கத்தோலிக்க நாடகங்களில் இவருக்குப் பெரும் ஈடுபாடு உண்டு.

இக்காலத்தில் ஈழத்து எழுத்தாளர் பலரும் தமது படைப்புகளை அச்சிட்டு வெளியிடுகின்றனர். இந்த முயற்சிக்குப் பேராசிரியர் வழங்கும் ஆதரவு இம்மட்டன்று. இதனுலேதான் பல நூல்களுக்கும் இவர் உள்ளம் உவந்து முன்னுரை வழங்குவார். எழுத்தாளரைக் கெளரவிக்கின்ற, பாராட்டுகின்ற கூட்டங்களில் இவர் கலந்து கொள்வார். '' புறப் பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி '' நூலுக்கும் இவர் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுரை வழங்குவார். அதே நேரத்தில் கல்லூரி மாணவரின் சிறுகதை ஆக்கத் தொகுப்பு நூலுக்கும் உள்ளம் உவந்து முன்னுரை வழங்குவார். பழம்பெரும் எழுத்தாளர் பெரும்மரம் போன்றவர். இளம் எழுத்தாளர் வளரும் மரம் போன்றவர். மாணவ எழுத்தாளர் இரண்டு இலைகொண்ட முளை போன்றவர். இந்த மூன்று சாரருக்கும் வித்தியானந்தனின் உதவி தாராளமாகக் கிடைக்கும்; உதவி வழங்க இவர் தயங்குவதில்லை. இது இவரின் தனிப் பண்பு. ஈழத்தின் எதிர்காலத்துத் தமிழ் வளர்ச்சிக்கு இது சிறந்த அறிகுறி.

**அனைத்துலகக் கருத்தரங்கில் :**

பேராசிரியர் வித்தியானந்தனின் எழுத்தும் பேச்சும் கருத்தும் தமிழ்கூறும் நல்லுலகின் புகழைப் பெற்றுள்ளன. இதனால் ஈழத்துத் தமிழ் உலகம் பெரும் பெருமையடைந்துள்ளது. அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் இவர் சாதித்தவை புறம்பாக ஆராயப்படவேண்டியவை. இந்த மாநாடுகள் கோலாலம்பூர், சென்னை, பரிஸ், யாழ்ப்பாணம், மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்றன. இந்த மாநாடுகள் தமிழுக்கு அனைத்துலகக் களிப்பை ஏற்படுத்தின. இந்த நிறுவனம் வெற்றியுடன் இயங்கப் பேராசிரியர் வித்தியானந்தன் அன்று தொடக்கம் இன்று வரையும் அயராது உழைத்து வருகின்றார். வரலாற்றுப் பெருமைமிக்க இந்த நிறுவனம் கால்கொள்ள உழைத்தவர் தனிநாயக அடிகளார். அடிகளாருக்கு உறுதுணையாக இருந்தவர் சிலர். அந்தச் சிலரில் முக்கியமான ஒருவர் பேராசிரியர் வித்தியானந்தன்.

நான்காது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என இந்த நிறுவனம் முடிவு செய்தது. இந்த முடி



வுக்கு வடிவம் கொடுத்து மாநாட்டை வெற்றிபெறச் செய்தவர் பேராசிரியர் வித்தியானந்தன். யாழ்ப்பாணத்தில் 1974இல் நடந்தேறிய மாநாடு பெரும் வெற்றியை ஈட்டியது. தொடக்கத்திலிருந்து இந்த மாநாட்டிற்குத் தொல்லைகள், எதிர்ப்புகள் முட்டுக்கட்டைகள் இருந்தன. இறுதியில் நடக்கக் கூடாதவை நடந்தேறின; உயிர் இழப்பு நடந்தது. இந்தச் சோக நிகழ்ச்சியின் தாக்கம் இன்னும் மாறவில்லை. இதனை இங்கு ஆராய வேண்டியதும் இல்லை. இத்தனை தடையையும் தாண்டி மாநாட்டை வெற்றிபெறச் செய்த பெருமையில் பெரும்பங்கு வித்தியானந்தனைச் சாரும். மாநாட்டிற்குப் பல நாடுகளிலும் இருந்து அறிஞர் பார்வையாளர் வந்தனர். இவரில் பலர் வித்தியானந்தனின் நண்பர். இவர்களை உள்ளம் கோணாது வரவேற்று உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பெரும் பொறுப்பான அலுவல். அத்துடன் மாநாட்டுப் பொது ஒழுங்கு, ஏற்பாடு என்பவற்றையும் வித்தியானந்தன் ஓடிஓடிச் செய்தார். இலங்கையில் ஏற்பட்ட அரசியல் கெடுபிடிகளின் காரணமாக அறிஞரின் வருகையில் தடங்கல்களும் ஏற்பட்டன. இன்னும் சில அறிஞர்கள் மாநாடு நடக்காது என்ற ஐயப்பாட்டினால் தம் கட்டுரைக்கு இறுதி வடிவம் கொடுக்கவில்லை. இங்கு வந்துதான் இறுதிவடிவம் கொடுத்தனர். ஈழத்து ஆராய்ச்சியாளரின் கட்டுரைகளுக்கு இறுதி வடிவம் கொடுத்தல், வழி காட்டுதல், கல்லச்சில் இடுதல் போன்ற பொறுப்புகள் இருந்தன. இதற்கு உதவக் கூடிய ஈழத்து அறிஞர் சிலர், மாநாட்டைவிட்டு விலத்தி நடந்தனர் அரசியல் காரணங்களுக்காக. இத்தனை தொல்லைகளுக்கும் ஈடு கொடுத்துச் சமன் செய்து நடப்பது வித்தியானந்தனின் கடமை; இதனால் உடல் நலம் குன்றியது; உளச்சோர்வு ஒரு பக்கம், மருந்தும் கையுமாக இருந்து பணிபுரிய வேண்டியநிலை வித்தியானந்தனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. யாழ்ப்பாணத்து மாநாடு ஏற்படுத்திய தாக்கம், விளைவு, அதன் பின்னணி அரசியல் அலை மோதல்பற்றி யாரும் ஆராயலாம் எப்படி ஆராய்ந்தாலும் வித்தியானந்தன் இந்த மாநாட்டின் கலங்கரை விளக்கமாக அமைந்தார் என்ற உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

## ஈழத்தில் தமிழியல் :

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக்கு வழிகாட்டியாக, பங்கு கொள்பவராக, அமைப்பாளராக அமைந்த பேராசிரியர் வித்தியானந்தன் வழிநடத்தி வந்துள்ளார். அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிளைகள் பல நாட்டிலும் இருக்கின்றன. இதன் ஈழத்துக் கிளையின் தலைவர் பேராசிரியர் வித்தியானந்தன். ஏனைய நாட்டுக் கிளைகளிலும் பார்க்க ஈழத்துக்கிளையே இன்று மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றது. இவரை வழிகாட்டியாக, அமைப்பாளராகக் கொண்டு இந்தக்கிளை மட்டக்களப்பு, முல்லைத்தீவு போன்ற இடங்களில் ஆராய்ச்சி மாநாடுகளை மிகவும் சிறப்பாக நடத்தியுள்ளது. இது பெருமைக்குரிய அலுவல். மலையகத்திலும் இப்படியான சிறப்பான மாநாடு ஒன்று நடத்த வேண்டும் என்பது பேராசிரியரின் திட்டம். இந்தத் திட்டம் நிறைவேறும் நல்ல நாளை எதிர்பார்த்து நிற்போமாக.

## சமநோக்கு :

பேராசிரியர் பிறப்பால் சைவர்; நல்ல சைவர். சைவக் குடும்பத்தில் பிறந்து சைவப் பின்னணியில் வளர்ந்தவர். இருந்தும் சாதி, சமயம் போன்ற குறுகிய வட்டத்தில் நின்று செயற்படுகின்ற தன்மை இவருக்கில்லை. இசிலாமியர், கிறித்தவர், பௌத்தர் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டுபற்றி நடுநிலைமையுடன் நின்று இவர் ஆராய்ந்துள்ளார். பிறரை



யும் ஆராய வைத்துள்ளார். இசிலாமியர் பற்றி ''பிறையன்பன்'' என்ற புனைபெயரில் ''கலையும் பண்பும்'' என்ற நூலை எழுதினார். இதற்கு 1961இல் இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசுகிடைத்தது. கத்தோலிக்கக் கூத்துகள்பற்றி இவர் செய்த ஆய்வுகள் புகழ் பெற்றவை. கத்தோலிக்கக் கூத்துகளை ஆய்ந்து இவர் பதிப்பித்துள்ளார். கிறித்தவர் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு பற்றிச் சிறப்பாக இவர் ஆய்வுகளை நடத்தினார். அதிலும் ஈழத்துக் கிறித்தவர்கள் பற்றி இவர் நடத்திய ஆய்வுகள் மிகவும் முக்கியமானவை. இவை யாவும் முன்னோடி முயற்சியாக அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்துப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த பீடம் ஒன்றினை அமைப்பதற்காக இவர் எடுத்த பெருமுயற்சி விரைவில் பயன் தரும். இப்படியான சமநோக்கு இவர் உள்ளத்தில் குடிகொண்டுள்ளது. போற்ற வேண்டியதைப் போற்றுவதே இவரின் பண்பு. இவரின் கட்டுரைகள் யாவும் ''இளங்கதிர்'' ''மசிலிசு'' ''இந்து தர்மம்'' ''இந்து இளைஞன்'' போன்ற ஏடுகளில் வெளிவந்துள்ளன. இவை இவரின் சமநோக்கிற்குத் தக்க சான்று பகரும்.

## சாதனையும் வேதனையும் :

பேராசிரியர் வித்தியானந்தனின் சாதனை பல. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுடன் சிறப்பாகவும், தமிழ் வரலாற்றுடன் பொதுவாகவும் இவரின் வாழ்க்கை அமைந்துள்ளது; இணைந்துள்ளது. சாதனைகளை இன்னும்பலர் மதிப்பிட வேண்டும். வேதனை நிறைந்த நிகழ்ச்சிகளையும் இங்கு கவனிக்க வேண்டும். எடுத்துக் காட்டாக வேதனை மூன்றை மட்டும் தரலாம். யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சாதனையை நிலைநாட்டியது. வேதனையையும் தந்தது. ஆட்சியாள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் கெடுபிடி, இரகசியக் காவலர் தரும் தொல்லை, உள்ளூர் அரசியல் வாதிகள் சிலர் கொடுத்த துன்பம், உயர்தர அரச நிர்வாகிகள் ஏற்படுத்திய சிக்கல், இறுதியில் நடந்த உயிர் இழப்பு எல்லாம் சேர்ந்து இவரின் உடல்நலத்தைப் பெரிதும் பாதித்தன. இவ ரின் அன்பர்கள் பலரும் '' வித்தி ஒரு போதும் தமி ழைக் காட்டிக் கொடார். உயிரைக் கொடுத்தேனும் தமிழைக் காப்பாற்றுவார் '' எனப் புகழ்ந்தனர்; ஆனால் இவரைப் பார்வையிட்ட மருத்துவ நிபுணர் '' மாநாடு பற்றிக் கவனஞ் செலுத்திய போதும்! இனி உங்கள் குடும்பத்தினருக்காக உங்கள் உடல் நலத் தைக் கவனியுங்கள் '' என்றனர். இதன் விளைவாக இவர் இரண்டு திங்கள் காலம் ஓய்வும் மருந்துமாக இருந்தார். இருந்தும் இரகசியக் காவலர் இவரின் வீட்டைப் பலமுறை பரிசோதனை செய்தனர்; மருத் துவப் பரிசோதனை ஒருபுறம். இறுதியில் அரசுச் சார்புடைய அரசியல் தலைவர் ஒருவரின் நல்ல தலை யீட்டினால் இரகசியக் காவலர் அழையா விருந்தாளி யாகச் சென்று இவரைக் குறுக்கு விசாரணை செய்து சல்லடை போடுவதை நிறுத்தினர். '' அப்பாடி! '' என ஆறுதலாக மூச்சுவிட்டார் திருமதி கமலாதேவி வித்தியானந்தன்.

இரண்டாவதாக நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை இனி நோக்கலாம். கொழும்பிலே இவர் ஒழுங்கு செய்த '' நந்தனார் '' கொட்டகைக் கூத்து இடம்பெற்றது: எல்லோருடைய பாராட்டையும் பெற்றது; சேரிக் காட்சியில் ஆடு கோழியை வைத்து உருவாடும் காட்சி இடம்பெற்றது. உருவாட்டம் மிகவும் நன்கு நடந்தது; அங்கு பார்வையாளராக வந்த கலைவல் லார் ஒருவர் நாடகத்தின் வெற்றியை விரும்பவில்லை; அடுத்த நாளே இலங்கைக் கலாச்சார அமைச்சிற்கு '' ஓலை '' ஒன்றை வரைந்தார்; அதன் சாரம் வரு



மாறு :- '' பௌத்த நாடு ஒன்றிலே, பௌத்த அறம் நிலைபெற்ற ஒரு நாட்டிலே மேடையில் ஆடு கோழி திருகிக் கொல்லப்பட்டன; அதுவும் கலையின் பெய ரால். '' உண்மையில் அப்படி எதுவும் நடக்கவில்லை. இந்த ஓலை பேராசிரியரின் பார்வைக்கு அனுப்பட் டது. இதனால் இவர் நெகிழ்ந்து போனார். இலங்கைக் கலைக் கழகத்து நாடகக் குழுவினராகிய நாமும், பேராசிரியரின் சிங்கள அன்பர்கள் பலரும் '' இது பிழையான ஓலை, நச்சுத்தன்மை வாய்ந்த போலி ஓலை '' என வாதிட்டோம். ''விசாரணைக்கும் தயார்'' என்றோம். கலை வல்லார் பின்னர் ஆடல் வல்லாராக மாறி '' நல்ல நாடகம் ஆடினார் ''.

மூன்றாவதாக '' இலக்கியத் தென்றல் '' நூல் வெளிவந்தபோது நடந்த நிகழ்ச்சி ஒன்றைத் தர லாம். இதுவே பேராசிரியர் எழுதி அச்சிட்ட முதலா வது நூல். இதற்குப் பெரும் வரவேற்புக் கிடைத் தது. இந்த நூல் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் பாராட்டைப் பெற்றது; ஆனால் ஈழத்து ஏடு ஒன்றின் ஆசிரியரத்தினம் ஒருவருக்கு இந்த முயற்சி பிடிக்க வில்லை. ''பல்கலைக்கழகத்து மாணவருக்கு ஏற்ற குறிப் புகள் அடங்கியது இந்த நூல் '' என்னும் கருத் துப்பட எழுதினார் இந்த ஆசிரியரத்தினம். இளம் வித்தியானந்தனின் இளம் நெஞ்சத்தில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது; சற்றுக் கலங்கி விட் டார். கடலும் கலங்கித் தெளியும் என்பது ஆன்றோர் வாக்கு. திருமதி கமலாதேவி வித்தியானந்தனின் மறைவு பேராசிரியரைப் பெரிதும் பாதித்தது; இத் துயர் சொல்லில் அடங்காது;

## ஒரு யுகம் :

இந்தச் சிறு நூலை நிறைவு செய்ய முன்னர் ஒன் றைக் கவனிக்க வேண்டும். பேராசிரியர் வித்தியா னந்தனின் வாழ்க்கையும் சாதனையும் எமது நாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றின் மூன்று கட்டத்துடன் இணைந்துள்ளன: முதலாவது கட்டம் இலங்கை விடுதலைபெற முந்தியது. இரண்டாவது கட்டம் இலங்கை விடுதலைபெற்ற 1948ஆம் ஆண்டுடன் தொடங்கி 1956ஆம் ஆண்டுடன் முடிகின்றது. மூன்றாவது கட்டம் 1956இல் தொடங்கி இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. இலங்கைக்கு 1948இல் விடுதலை கிடைத்தது என்பர் ஒரு சாரார். இல்லை. உண்மையான விடுதலை 1956இல் நடந்த மக்கள் ஐக்கிய முன்னணியின் சமதர்ம கோட்பாடுடைய அரசாங்கத் தேர்தல் வெற்றியுடன் கிடைத்தது என்பர் மற்றொரு சாரார் அதுபற்றி அரசியல் அறிஞர் ஆராயட்டும். மூன்றாவது கட்டத்தில் மொழியுரிமைப் போராட்டம், கொந்தளிப்பு, இனக்கலவரம் போன்றன இடம்பெற்றன. வரலாற்றுக்கட்டம் தோன்றலாம்; மாறலாம்; மறையலாம். எது நடந்தாலும் பேராசிரியர் வித்தியானந்தனின் தமிழியல் ஈடுபாடும் பற்றும் ஒருபோதும் மாறவில்லை.

இந்த மூன்று காலகட்டத்திலும் பல சாராரும் பல போக்கையும் கொண்டிருந்தனர். இலங்கை விடுதலை அடைய முன்னர் எமது நாட்டின் ஒரு சாரார் ஆங்கில நாகரிகத்தில் மூழ்கி மேலைநாட்டுப் பாணியைப் பின்பற்றி வந்தனர். இந்தச் சாராரின் போக்கை விளங்க வேண்டுமானால் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் '' தாளித்த தமிழ்க் கூற்றை '' இங்கு தரல் வேண்டும். '' பலாப்பழம் தின்ன இவர் கரண்டி முள்ளுத் தேடித் திரிந்தனர் '', '' இலங்கையானது இங்கிலாந்தின் ஒரு சிறு பகுதி '' என்றனர் இந்தப் போலிக் கூட்டத்தினர்; இப்படியான மாயை ஒன்றைத் தோற்றுவித்து அதனுள் ஆமை போல இவர் வாழ்ந்தனர். இவர் தம்மை மறந்தனர்; தம்நாட்டை, மொழியை, மதத்தை, பண்பாட்டை மறந்தனர்.



இவர்களைப் பொறுத்தவரையில் தமிழ் சிங்களம் வீட்டு மொழி, அங்காடியில் பொருள்களை வாங்க உதவும் மொழி, நாட்டு மொழி ஆங்கிலம். இந்தச் சாராரின் எதிர்புத் தமிழுக்கு இருந்தது.

இரண்டாவது சாரார் ஈழத்தின் தனித்தன்மைக்கு இடராக இருந்து வந்தனர். ''ஈழம் என்றால் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் ஒரு பகுதி'' என்றனர்; என்று கூறி வாளாவிருந்தனர். ஈழத்துத் தமிழியல் வளர்ச்சியில் இவர்களுக்கு எந்த விதமான ஈடுபாடும் இல்லை, பாக்குநீரிணைக்கு அப்பாலிருந்து வருபவை எல்லாம் நல்லவை. ஈழத்தில் தோன்றுபவை எல்லாம் மட்டமானவை; இதன்பயனாக ஈழத்தின் தமிழியல் முயற்சிகளுக்கு இச் சாரார் உரிய இடத்தைத் தர மறுத்தனர்.

மூன்றாவது சாரார் பழமைவாதிகள்; இவர்களுக்குச் சமகால நிகழ்ச்சியில் ஈடுபாடு கிடையாது. ''உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்'', ''பால் எல்லாம் ஆவின் பாலாமோ? உரையெல்லாம் பரிமேலழகர் உரையாமோ?'' எனக்கூறி வாழ்ந்தனர். நூலாசிரியர்களான தொல்காப்பியர், திருவள்ளுவர் ஆகியோரிலும் பார்க்க உரையாசிரியர்களே மேலானவர் எனவும் கருதினர். திருக்குறள், தொல்காப்பியம் பற்றி ஆராய இவர் முன்வருவதில்லை. இந்தப் பழமைவாதிகளின் தமிழ்ப் பற்று, புலமை என்பன பாராட்டப்படவேண்டியவை; ஆனால் இவரின் போக்குத் தமிழ் வளர்ச்சிக்குத் தடையாகவும் ஒருவகையில் இருந்தது.

இவர்களுக்கெல்லாம் நேருக்கு நேராகப் பேராசிரியர் வித்தியானந்தன் போன்றோர் மறுமொழி கொடுத்திலர்; இப்படிக் கொடுப்பது பயன் இல்லாத முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் போன்றோர் உணர்ந்தனர். ஆகவே திட்டம் ஒன்றைப் பேராசிரியர் கணபதிப் பிள்ளை தன் உள்ளத்தில் வளர்த்தார். இத்திட்டம் வெள்ளையறிக்கையாகவோ, புள்ளி விபரத் திரட்டாகவோ அமையவில்லை. பல்கலைக் கழக மட்டத்தில் தமிழ் கற்கும் மாணவரின் தொகை கூடவேண்டும்; தமிழின் கல்வித்தரம் உயர வேண்டும். ஈழம் பற்றிய ஆய்வு வளர வேண்டும். தமிழ் கற்கும் மாணவர் களைக் கலக்கியடிக்காது ஊக்க வேண்டும். இதுவே பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் திட்டம். இதற்கு உறுதுணையாக இருந்தவர் பேராசிரியர் வித்தியானந்தன். இதன் விளைவு போற்றத்தக்கது: சர்க்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் எழுதிய " சர்க்கரவர்த் திருமகன் ", பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை எழுதிய " இலக்கிய வழி " போன்ற நூல்கள் இலங்கையில் பாடநூல்களாகின. பழம்தமிழ் நூல்களும் பாடநூல்களாகின. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் அமைதியான திட்டத்தின் விளைவாக உருவான அறிஞர் பலரும் இன்று தமிழியலில் உலகப்புகழ் பெற்றுள்ளனர். இதற்கு விழுதுபோல இருந்து உழைத்த தனிப்பெருமை பேராசிரியர் வித்தியானந்தனைச் சாரும். சுருங்கச் சொன்னால் பேராசிரியர் வித்தியானந்தன் ஒரு யுகத்தை எதிர்த்தார்; ஒரு யுகத்தைத் தோற்றுவித்தார். இந்தப் புதிய யுகம் தமிழ் வரலாற்றில் உரிய இடத்தைப் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org